# தமிழர் பொருளியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 58

25.02.2024




மூத்தவர்களுக்கான வரி நிதிச் செல்வ மேலாண்மை 10

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுமே உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்லும் 12

வீட்டுத் தோட்டங்களில் மஞ்சள் பயிர்ச் செய்கை 16

# இலாபம் தரும் திராட்சை பயிர்ச்செய்கை

# சூரிய சக்திப் படகு யாழில் தயாரிப்பு



- பார்த்தீபன் -



போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளால் கட்டப்பட்ட கடற்கலங்களை போர் முடிவடைந்த பின் பார்வையிட்டு வியப்படைந்து அதனால் உந்தப்பட்டு வடக்கில் உள்ள அவ்வாறான திறமையாளர்களை பயன்படுத்தி கடற் கலங்களை உருவாக்கும் வணிகத்தில் இறங்கி காரைநகர் சீநோர் தொழிற்சாலையினை குத்தகைக்கு எடுத்து படகுகட்டும் நிறுவனம் ஒன்றை அமைத்திருக்கிறார் சிங்கள மருத்துவர் ஒருவர். இதனால், யாழில் தயாராகும் படகுகள் இப்போது சர்வதேச சந்தையை நோக்கிச் செல்கின்றது.

கடல் சூழ்ந்த அழகிய கிராமமான காரைநகரிலிருந்து பலர் வெளியேறியிருந்தாலும் கூட, இங்கு முன்னெடுக்கப்படும் திட்டம் ஒன்று காரைநகரை மீண்டும் பேசுபொருளாக்கியிருக்கின்றது. இங்கு இருக்கக்கூட வளங்களைப் பயன்படுத்தி உச்ச பலன்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் நிறைய இருந்தாலும்கூட, அதில் அக்கறை காட்டுபவர்களின் தொகை குறைவாகத்தான் இருக்கின்றது. நம்பிக்கையீனம் காரணமாகவே பலர் முதலீடுகளைச் செய்வதற்குத் தயங்குகின்றார்கள். ஆனாலும், துணிச்சலுடன் ரிஸ்க் எடுத்து முதலீடுகளைச் செய்த பலர் தமது முயற்சிகளில் வெற்றிபெற்றிருக்கின்றார்கள்.

நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் இந்தப் பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்குப் பிரதான காரணம் போதிய டொலர் இல்லாததுதான். அதாவது, இறக்குமதி அதிகமாகவும், ஏற்றுமதிகள் குறைவாகவும் இருப்பதால் நாட்டுக்குள் டொலர் வருவது குறைந்துள்ளது. இலங்கையில் இருக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதிகளை அதிகரிப்பதுதான் இதற்கான தீர்வாக இருக்க முடியும். இந்தப் பின்னணியில்தான் காரைநகரில் உருவாக்கப்பட்டு, இன்று ஏற்றுமதி வர்த்தகத்தில் தடம்பதித்துள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை அனைவரது கவனத்தையும் பெற்றுள்ளது.

வடக்கில் உள்ள தீவுகள் மீன்பிடிக்குப் பெயர்போனவை என்பது அனைவருக்கும் தெரியும். அதற்கு மேலாக உல்லாசப் பயணிகளைக் கவரும் தீவுகளாகவும் இவை உள்ளன. ஆனால், இவற்றுக்கும் மேலாக இத்தீவுப் பகுதிகளில் முதலீடுகளைச் செய்வதன் மூலமாக இன்னும் எவ்வாறான பொருளாதார நலன்களைப் பெறமுடியும் எனச் சிந்தித்தன் விளைவாகத்தான் இங்கு இப்போது கப்பல் கட்டும் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு மருத்துவராக அவந்தத்துப்பத்து அரசாங்கச் சேவையில் இணைந்து பத்து வருடங்களாகப் பணியாற்றியவர். அதேநேரத்தில் சூரிய சக்தி நிறுவனம் ஒன்றையும் அவர் ஆரம்பித்தார். இது பிரதானமான சூரிய சக்தியிலிருந்து மின்சக்தியைக் கொடுப்பதற்கான கலங்களை உற்பத்தி செய்வதையும், அவற்றை விநியோகிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. அதன் தொடர்ச்சியாக 1918 இல் அவர் படகு உற்பத்தில் நிறுவனம் ஒன்றையும் ஆரம்பித்தார்.

“இரண்டு, மூன்று படகுகளை நாம் உற்பத்தி செய்தோம். அது வெற்றியளித்தது. அது வெற்றியளித்த நிலையில், சூரிய சக்தியில் செயற்படக்கூடிய கடகுகளை உருவாக்குவதில் எமது கவனத்தைச் செலுத்தினோம்” என்று கூறுகின்றார் டொக்டர் அவந்தத்துப்பத்து. “இந்தப் படகுகளை ஏற்றுமதி செய்வதிலும் நாம் கவனத்தைச் செலுத்தினோம்” என்றும் அவர் சொல்கின்றார்.

அரசாங்க சேவையில் உள்ள எவரும், அந்தத் தொழிலைப் பாதுகாத்து நிம்மதியாக வேலையைச் செய்து, குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சிந்திப்பார்கள். ஆனால், ஒரு மருத்துவராக நல்ல வேலையில் இருந்த அவரால், அவ்வாறு இருந்துவிட முடியவில்லை. இலத்திரனியல், பொறியியல் துறைகளில் அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக அவர் புதிய துறைகளில் கால்பதிக்க துணிந்தார். தனது நண்பர்களின் உதவியுடன் சூழலைப் பாதிக்காதவாறு சூரிய சக்தியைப் பயன்படுத்தி படகுகளைத் தயாரிப்பதில் அவர் வெற்றி பெற்றார். படகு ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த நிறுவனத்தை அவர் ஆரம்பித்தார்.

இதன்படி ஆராய்ச்சிகளின் அடிப்படையில் பரீட்சார்ந்தமாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சி இன்று வெற்றியளித்துள்ளது. அவரது நண்பரான மின்பொறியியலாளர் ஒருவர் அவரது இந்த முயற்சிகளுக்குத் துணையாக இருந்தார். இருவரும் இணைந்து சூரிய சக்தியில் செயற்படும் பஸ் ஒன்றை முதலில் தயாரித்தார்கள். அதன் தொடர்ச்சியாகவே சூரிய சக்தியில் இயங்கும் படகுகள் அவர்களால் வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்டது. 2019 இல் இந்த பரிசோதனை முயற்சிகள் பெருமளவுக்கு முடிவடைந்திருந்தது. பெந்தோட்டையில் இது வெற்றிகரமாக வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டது.

இது வெற்றியளித்ததையடுத்து விஷேடமான அம்சங்களுடன் மேலும் சில படகுகளை அவர்கள் தயாரித்தார்கள். சுமார் இருபத்தைந்து படகுகள் இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றையிட்டு தகவல் அறிந்த பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இவற்றில் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கையை அனுப்பியுள்ளார். 80 அடி நீளமான உணவு பரிமாறுவதற்கான வசதிகளுடனான படகு ஒன்றையே அவர் கோரியிருந்தார்.

அந்தக் கேள்வியுடன் எமது உற்பத்தி - விற்பனையை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக சிந்தித்த பின்னணிலேயே அவர்கள் தமது படகு தயாரிக்கும் தொழிற்சாலையை காரைநகருக்குக் கொண்டுவந்தார்கள். அதாவது, தமது தொழிலை மேலும் விஸ்தரிப்பதற்கு சிறந்த இடமாக காரை நகர் இருந்துள்ளது. காரைநகரில் அரசுக்குச் சொந்தமான சீநோர் பகுதியை குத்தகைக்கு எடுத்துள்ள அவர்கள் சுமார் 80 படகுகளை அங்கு உற்பத்திசெய்துகொண்டிருக்கின்றார்கள்.

காரைநகருக்குத் தமது தொழிற்சாலையைக் கொண்டுவந்தமைக்கான காரணத்தைக் கேட்டபோது, போர் முடிவடைந்த பின்னர்தான் இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்றதாகவும், விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட படகுகளைப் பார்த்து தான் வியந்ததாகவும் கூறுகின்றார். எந்த வசதிகளும் இல்லாமல், தாமாகவே படகுகளைச் செய்து இலங்கைக் கடற்படையுடன் அவர்கள் நடுக்கடலில் போர் புரிந்தார்கள். அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே வடபகுதியில் இடம்தேடியதாக அவர் சொல்கிறார்.



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

எங்கட கோயில்லை திருவிழாக்காலம் பத்து நாளும் தவறாம மடத்தில மாகேசுர பூசை எண்ட அன்னதானம் நடந்தது.

மத்தியானத்தில சோறும் இரவில புட்டு றொட்டி எண்டு பலகாரங்களும் கோயிலுக்குப்போன ஆக்களுக்கும்போகாத ஆக்களுக்கும் குடுத்தவை. வீட்டம்மா ஒவ்வொரு நாளும் பகல் இரவுத்திருவிழாத் தவற விடமாட்டா.

என்னப்பா ஏன் இப்பிடி எண்டால் உங்களுக்கு அறிவில்லை எண்டு கோத்தை சொல்லுறது உண்மைதான் எண்டா. பின்ன என்ன விசர்க்கதை கதைக்கிறியள். உங்க காஸ் கிடையாது .இனி விறகடுப்புக்கை தவண்டுகிடந்து மூஞ்சையைக் குடுத்து அடுப்பு மூட்ட ஆரால ஏலும்.

சாமான்களும் கடும்விலை. கோயிலுக்குப்போனா மத்தியானம் இரவு றெண்டு நேரமும் சாப்பாட்டைக் கவர் பண்ணலாம் காசும் மிச்சம் வேலையும் மிச்சம் எண்டு என்னையும் பெடி பெட்டையளையும் இழுத்துக்கொண்டு போடுவா.

எங்கட கோயில்களிலை அன்னதானம் முக்கியமான ஒண்டா இருக்குது. அதுக்கு ஆன்மீக சமூக பொருளாதாரக் காரணங்கள் நிறைய இருக்குது எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ.

சிவபெருமானை மகேஸ்வரன் எண்டுவம். மகேஸ்வரன் எண்டால் மகா அண்டங்களை உடையவன் எண்டு பொருள் எண்டுவா ஆச்சி. அந்த மகேஸ்வரனோ தொண்டர்களின் உள்ளத்தில் ஒடுக்கம் எண்டு ஒளவையார் சொல்லுறா.

இப்பிடி மகேஸ்வரன் உறைகின்ற உள்ளம் உள்ளவர்களை மாகேசுரர் எண்டுவினம். அந்த மாகேசுரர்களுக்கு அவர்களின் ரிசிமூலம் நதிமூலம் சமூக நிலைகளைப் பாராமல் உணவு குடுக்க வேணும் எண்டது எங்கட ஆன்மீக விளக்கம்.

இறைவன் ஒவ்வொருவரிலும் இருக்கிறான். ஆகவே அவர்களுக்கு உணவு குடுப்பது இறைவனுக்கு உணவு குடுப்பது போன்றது எண்டு எங்கட ஆன்மீகம் சொல்லுது எண்டுவார் அப்பு..

இதால பல ஏழையளும் அவையின்ரை குடும்பங்களும் பசியாறும்.

இந்த மாகேசுர பூசைக்கு இயலுமான ஒவ்வொருவரும் பங்களிப்பினம். அப்பிடிச் செய்யிறதால இறைவன்ரை பெயரால அடியவர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு குடுப்பினம். அதோட ஊரே கூடி இருந்து சமைப்பினம்.

சாப்பிடுகிற பந்தியிலையும் எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் எல்லாரும் ஒண்டா இருந்து சாப்பிடுவினம்.

இப்பிடி பங்களிக்கிறதாலையும் ஒண்டா இருந்து சாப்பிடுறதாலையும் சமூக ஒற்றுமை வளரும் எண்டுவார் அப்பு.

இதைவிட முக்கியமான இன்னொரு காரணமும் இந்த அன்னதானத்துக்குப்பின்னால இருக்குது. அது என்னணண்டால் எங்கட பழைய சமூகம் உழைப்பாளர் சமூகம்.

கோயில் திருவிழாக் கொண்டாடினால் உழைக்க முடியாது. உழைக்காவிட்டால் சாப்பிட முடியாது. அதால அன்ன தானம் இருந்தால் அவை உழைக்கப் போகவேண்டிய தேவை இல்லாமல் ஆன்மீக வேலைகளிலை ஈடுபடுவினம்.

அப்ப அவை எல்லாரும் திருவிழாக்களிலை பங்குபற்றுவினம். அதோட பசி வந்தாப்பறக்கிற பத்தில கடவுள் சிந்தனையும் ஒண்டெண்டுவார் அப்பு. அப்ப எல்லாற்றையும் பசியைத்தீர்க்கிற வேலையை அன்னதானம் செய்யுது எண்டுவாஆச்சி.

தனிய ஆக்களின்ரை பசிமட்டும் எண்டில்லை அன்னதானத்தில மிஞ்சிற சாப்பாட்டால காகம், குருவி, மாடு, ஆடு, நாய், பூனை, எறும்பு , புழு, பூச்சியெண்டு எல்லாத்தின்ரை பசியும் போகும் எண்டுவா ஆச்சி. பசியால கஸ்ரப்படுகிற ஒருத்தனுக்கு சாப்பாடு போடுகிறது பெரிய புண்ணியம் எண்டுவா.

அன்னதானக் கந்தன் எண்டிற செல்வச்சந்நிதி முருகனைப் பாக்கப்போனா வயிறாறப் பசியாறுகிற கைவிடப்பட்ட பல வயசுபோனவையை ஏலாதவையை வருத்தக்காறர் எண்டு ஒரு மாகேசுர கூட்டத்தைக் காணலாம். உண்ணான கோயில் உண்டியல்லை காசு போடுறதை விட ஐயருக்கு கை நிறைய தட்சிணை குடுத்து அருச்சினை செய்யிறதை விட அங்க கோயில் வாசலிலை பசியோட இருக்கிற இல்லாத செல்லாததுகளுக்கு ஏதும் தின்னிறதுக்கு வாங்கிக் குடுக்கலாம்

உப்பிடிச் செய்யறது கடவுளுக்கும் வலுபுறியமா இருக்கும் கண்டியோ எண்டுவார் அப்பு.

அதாலைதான் முந்தி எங்கட பெரிய ஆக்கள் ஏழைகளின்ரை சிரிப்பிலை இறைவனைக் காணலாம் எண்டு சொன்னவை.

ஆனால் விலாசத்துக்காகப் போட்டி போட்டு காசைத்தண்ணியாச் செலவு செய்து திருவிழாச் செய்யிற கன கறுமங்களுக்கு உப்படி அந்தப் பெரியாக்கள் சொன்னது கடைசிவரையும் விளங்கிறேல்லை எண்டுவார் அப்பு.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# மத்திய வங்கி எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது கணிக்கப்பட்ட அளவைவிட குறையும் அபாயம் உள்ளது என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது. திறன்மிக்க இலங்கையர்கள் வெளி நாடுகளுக்குப் படையெடுப்பதால் இந்த நிலை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை மத்திய வங்கியால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மற்றொரு தவறான பொருளாதாரக் கொள்கைதான் இந்த நெருக்கடிக்கும் காரணம். நாட்டில் உருவாகிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரசாங்கத் துறையில் பணியாற்றுபவர்கள் ஐந்து வருடங்கள் வரை சம்பளமற்ற விடுமுறையை எடுத்துக்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு, பல்வேறு துறைகளிலும் உள்ள தொழில்சார் வல்லுனர்கள் பெருமளவில் வெளிநாகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

இரண்டு விடயங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. முதலாவது, பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணமாக இருந்தது அந்நியச் செலாவணிப் பற்றாக்குறைதான். பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினால் அதனைப் பெறலாம் என அரசாங்கம் கணக்குப் போட்டது. இரண்டாவது, அரச பணியாளர்களை சம்பளமற்ற விடுமுறையில் அனுப்பினால் – அரசாங்கத்தின் செலவீனம் குறையும் என அரசாங்கம் கணக்குப் போட்டது. ஆனால், இதன் மறுபக்கத்தில் உருவாகக்கூடிய பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக அரசாங்கம் முன்னெடுத்த இந்த உபாயம் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துவதற்கு மட்டுமே உதவியது. "உலகத் துறையில் சாதகமற்ற போக்குகள் ஏற்றுமதித் துறையின் மீட்சியையும், திறன்மிக்க இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது. இதன் காரணமாக குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் உள்ளது" என்று மத்திய வங்கி இப்போது சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"தற்போது கணிக்கப்பட்டுள்ளபடி, குறுகிய காலத்துக்குப் பொருளாதார வளர்ச்சி மெதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பொருளாதாரம் படிப்படியாக அதிக வளர்ச்சி நிலைக்கு வரும்" என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அரசாங்கம் வழங்கிய சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு தொழில்சார் வல்லுனர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். குறிப்பாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் மருத்துவர்களுக்கு இதனால் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த அணுகுமுறை பொருளாதார ரீதியாக குறுகிய காலத்துக்கு சில நன்மைகளைப் பெற்றுத் தந்தாலும், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பொறுத்தவரையில் பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். இந்த நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு அரசாங்கம் தனது அடுத்த கட்டச் செயற்பாடுகளைத் திட்டமிடுவது அவசியமாகும்.



லக்ஷ்மி நாராயணன்

# பொருளாதாரம் சரிந்ததால் உலகளவில் 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்ட ஜப்பான்

ஜப்பான் நாட்டின் பொருளாதாரம் சரிந்து வருகிறது. கடந்த அக்டோபர் - டிசெம்பர் வரையிலான காலாண்டில் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 0.4 சதவீதம் சரிந்துள்ளது. அதற்கு முந்தைய ஜூலை - செப்ரெம்பர் காலாண்டில் 2.9 சதவீதம் சரிந்தது. தொடர்ச்சியாக, இரண்டு காலாண்டாக ஜப்பானின் ஜிடிபி சரிந்துள்ள நிலையில், அந்நாடு உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் 3ஆவது இடத்திலிருந்து 4ஆவது இடத்துக்கு பின்னகர்ந்துள்ளது.

ஜப்பானின் மக்கள் தொகை குறைந்து வருவதும், உற்பத்தியும் போட்டிச் சூழலும் குறைந்திருப்பதும் அதன் பொருளாதார சரிவுக்கு காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இரண்டாம் உலகப் போரில் மிகப் பெரும் அழிவுக்கு உள்ளான ஜப்பான், விரைவிலேயே அந்த அழிவிலிருந்து மீண்டதோடு மட்டுமில்லாமல், பொருளாதார ரீதியாக அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தைப் பிடித்தது.

1970, 80-களில் மிகப் பெரும் வளர்ச்சியில் ஜப்பான் பயணித்தது. 1990-ல் ஏற்பட்ட ரியல் எஸ்டேட் துறை சரிவால் அதன் பொருளாதாரம் தடுமாற்றத்துக்கு உள்ளானது. எனினும் நிதான வேகத்தில் அதன் வளர்ச்சி இருந்தது. இந்நிலையில், 2010-ம் ஆண்டு ஜப்பானை பின்னுக்குத் தள்ளி சீனா 2-வது இடத்துக்கு முன்னேறியது.

2023-ம் ஆண்டு நிலைவரப்படி இப்பட்டியலில் ஜப்பான் 3-வது இடத்திலும், ஜெர்மனி 4-வது இடத்திலும் இருந்தன. இந்நிலையில், தற்போது ஜப்பான் 4-ம் இடத்துக்கு பின்னகர்ந்துள்ளது. ஜெர்மனி 3ஆம் இடம் பிடித்துள்ளது. இந்தியா 5ஆவது இடத்தில் உள்ளது.

ஜப்பானின் பொருளாதார சரிவு குறித்து டோக்கியோ பல்கலைக்கழக பேராசிரியர் டெட்சுஜி ஒகாசாகி கூறுகையில், "முன்பு, உலகளவில் வாகனத் துறையில் ஜப்பான் நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. தற்போது உலகம் மின்வாகனம் நோக்கி வேகமாக நகர்ந்து வருகிற நிலையில், ஜப்பான் அதன் முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியுள்ளது.

ஜப்பானில் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்துள்ளது. இதனால், தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், தனிநபர் நுகர்வு தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனால், முதலீட்டாளர்கள் ஜப்பானில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகின்றனர்" என்று தெரிவித்துள்ளார்.

**2023ஆம் ஆண்டு நிலைவரப்படி இப்பட்டியலில் ஜப்பான் 3ஆவது இடத்திலும், ஜெர்மனி 4ஆவது இடத்திலும் இருந்தன. இந்நிலையில், தற்போது ஜப்பான் 4ஆம் இடத்துக்கு பின்னகர்ந்துள்ளது. ஜெர்மனி 3ஆம் இடம் பிடித்துள்ளது. இந்தியா 5ஆவது இடத்தில் உள்ளது.**




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,63,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,78,650 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக கடந்த வாரம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இப்போதும் பொருளாதார நிலைமைகள் இலங்கையில் அந்தளவுக்கு மோசமானதாகத்தான் இருக்கின்றனவா?

கோகிலா தர்ஷினி


ரொரொன்ரோ, கனடா.

**பதில் -** பொருளாதார நெருக்கடி ஓரளவுக்கு தீர்க்கப்பட்டிருப்பது போன்ற ஒரு தோற்றம் இருந்தாலும், உண்மை நிலை அவ்வாறில்லை. எரிபொருட்களின் விநியோகத்தில் சீன நிறுவனம் ஒன்றும், அமெரிக்க நிறுவனம் ஒன்றும் களமிறக்கப்பட்டிருப்பதால், எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. ஆனால், விலை உச்சத்தில்தான்.

அதனால், மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் உட்பட அனைத்தும் உயர்ந்துள்ளன. அதனைவிட அதிகரித்த வற் வரி காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பகங்கள் நாடு முழுவதும் மூடப்பட்டுள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உற்பத்திகள், முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் நுகர்வோர் வெதுப்பக பொருட்களின் பாவனையிலிருந்து விலகியமை போன்ற காரணங்களால் வெதுப்பக தொழில்துறை பின்னடைவை சந்தித்துள்ளதாக அதன் தலைவர் என். கே. குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில், ஏழைகளின் உணவாகத்தான் பாண் கருதப்பட்டது. ஆனால், அதனைக்கூட வாங்க முடியாத நிலைக்கும்



இலங்கையின் வறுமைக்கோட்டுக்குள் வாழும் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது மிகவும் கசப்பான உண்மை.

இதேவேளை, பாணுக்கான வர்த்தமானியின் பிரகாரம், தேவையான எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத 453 வெதுப்பகங்கள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு பாணின் எடை 450 கிராம் எனவும் அதிகபட்சமாக 13.05 கிராம் எடையைத்தான் குறைக்க முடியும் எனவும் அதிகார சபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது. அரை கிராம் பாணின் எடை 225 கிராம் என்றும், குறைக்கக்கூடிய அதிகபட்ச எடை 9 கிராம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தை மீறும் வெதுப்பகங்கள் மற்றும் கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இது தொடர்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அவசர தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்கலாம் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதேவேளை, பாண் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற நெருக்கடிகளுக்குள் பாணை உற்பத்தி செய்து நட்டத்தையடைவதைவிட, உற்பத்தியையே நிறுத்தலாம் என வெதுப்பக உரிமையாளர்கள் சிலர் தீர்மானித்திருக்கலாம்.

### கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 250/= |
| உருளைக்கிழங்கு | - 150/= |
| பச்சைமிளகாய் | - 600/= |
| தக்காளி | - 600/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 120/= |
| கோவா | - 400/= |
| கரட் | - 600/= |
| பூசணி | - 200/= |
| புடோல் | - 200/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 200/= |
| பெரிய வெங்காயம் | - 360/= |
| பாகற்காய் | - 350/= |
| வெண்டிக்காய் | - 400/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 350/= |
| கறிமிளகாய் | - 600/= |
| போஞ்சி | - 350/= |
| கீரை - 1 பிடி | - 80/= |
| தேசிக்காய் | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 199/= |
| கனடா டொலர் - | 226/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 330/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 226/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 307/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 209/= |
| கனடா டொலர் - | 236/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 344/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 237/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 401/= |
| சுவிஸ் பிராங் - | 363/= |
| அமெரிக்க டொலர் - | 316/= |



அ. ராஜன்

# உலகெங்கிலும் விவசாயிகள் எதற்காக போராடுகிறார்கள்?

உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்ட பங்களிப்பைக் கொண்டுள்ள விவசாய சமூகத்துக்கான பிரச்சினை என்பது இலங்கையில் அல்லது இந்தியாவில் மட்டுமல்ல. உலகம் முழுவதும்தான்.

பிரான்ஸ் தொடங்கி கிரீஸ் வரை போராட்டங்களை முன்னெடுத்து வரும் விவசாயிகள் தான் இதற்கு சான்று. விவசாய வருமானம் அதிகரிப்புக்கு உத்தரவாதம், அந்நிய நாடுகளின் போட்டியிலிருந்து பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக விவசாயிகள் நீண்டகாலமாக போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், விவசாய பணிகள் அமைவிடங்களைப் பொறுத்து வறட்சி, வெள்ளம், சூறாவளி, வெப்ப அலைகள் உள்ளிட்ட ஒழுங்கற்ற வானிலைகளால் தற்போது அடிக்கடி பாதிப்புக்குள்ளாக தொடங்கியுள்ளது. இது காலநிலை மாற்றத்தின் விளைவு.

இதனால், பயிர் விளைச்சல், கால்நடை வளர்ப்பு பாதிப்புக்குள்ளாகி ஒட்டுமொத்த பண்ணை உற்பத்தி திறனும் குறைந்து போவது விவசாயிகளின் தற்போதைய போராட்டங்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமாக காரணங்களாக மாறி வருகின்றன.

ஒவ்வொரு நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகள் அவர்களின் போராட்டங்கள் குறித்து பார்க்கலாம்:

பிரான்ஸ்: பிரான்ஸ் விவசாயிகள் கடந்த ஜனவரி 29-ல் நம்மூர் விவசாயிகளைப் போன்றே டிராக்டர்களில் நீண்ட வரிசைகட்டி நெடுஞ்சாலைகளை முற்றுகையிட்டனர். வேளாண் வருவாயை அதிகரிக்கும் திட்டங்களை செயல்படுத்தவும், அந்நிய போட்டியிலிருந்து வேளாண் தொழிலை பாதுகாக்கவும் அதிபர் இம்மானுவேல் மேக்ரானின் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இந்த நிலையில், பிரான்ஸ் அரசு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்ற 400 மில்லியன் யூரோக்களை ஒதுக்கிய பிறகே பிப். 2-ல் சாலைகளில் இருந்த தடைகளை படிப்படியாக விவசாயிகள் விலக்கிக் கொண்டனர்.

இத்தாலி: வேளாண் துறைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் விவசாய கொள்கைகள் பாதகமாக இருப்பதாக தெரிவித்து தலைநகர் ரோமில் அங்குள்ள விவசாயிகள் ஒன்றிணைந்து பெரிய பேரணி நடத்தினர்.

ஜெர்மனி: வேளாண் மானியங்கள் குறைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து 2024 ஜனவரி 8-ல் நாடு தழுவிய போராட்டங்களை ஜெர்மனி விவசாயிகள் முன்னெடுத்தனர்.

குறிப்பாக, வேளாண் பணிகளுக்கான டீசல் மீதானவரிச் சலுகையை படிப்படியாக அகற்ற பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியான நிலையில் அது தங்களை திவால் நிலைக்கு இட்டுச் செல்லும் என்று விவசாயிகள் கூறினர். அரசுக்கும்-விவசாயிகளுக்கும் இடையிலான இந்த போராட்டம் சுமார் இரண்டு மாதங்கள் வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து: ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை சாராத நாடுகளின் நியாயமற்ற போட்டியை கண்டித்து போலந்து விவசாயிகள் சாலைகளில் இறங்கி பிப்ரவரி முதல் போராட தொடங்கியுள்ளனர். நாடு முழுவதும் சுமார் ஒரு மாத காலத்துக்கு வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஸ்பெயின்: வேளாண் நடவடிக்கைகளுக்கு அதிக வரி விதிப்பு, அரசின் உதவிகளைப் பெறுவதில் பல்வேறு தடை, கட்டுப்பாடுகளும் இருப்பதாக கூறி ஸ்பெயின் விவசாயிகள் பிப். 6-ல் நடத்திய நாடு தழுவிய போராட்டம் வன்முறையாக மாறியது. இந்த மாதம் முழுவதும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒவ்வொரு தெருவிலும் இறங்கி போராட்டத்தை தீவிரப்படுத்த விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

பெல்ஜியம்: வேளாண் செலவுகள் அதிகரிப்பு, வரி உயர்வு ஆகியவற்றுக்கு எதிராக அங்குள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் டிராக்டருடன் பிரஸ்ஸல்ஸ் நகருக்குள் நுழைந்து இம்மாதம் நாடாளுமன்றம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயத்தை ஸ்திரத்தன்மை கொண்டதாக மாற்ற அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது அவர்களின் ஒரே கோஷமாக இருந்தது.

லிதுவேனியா: லிதுவேனியா அரசின் வேளாண் கொள்கைகளால் அதிருப்தி அடைந்த விவசாயிகள் தலைநகர் வில்னியஸை கடந்த ஜனவரியில் இரண்டு நாள் டிராக்டரில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். ரஷ்ய உணவுப் பொருட்களின் ஏற்றுமதியால் தாங்கள் பாதிக்கப்படுவதாக கூறி அவற்றுக்கு தடை விதிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. இது தொடர்பாக பிரதமரை சந்தித்தும் விவசாயிகள் முறையிட்டனர்.

கிரீஸ்: எரிபொருட்கள் விலை உயர்வு, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க அரசின் நடவடிக்கையை முடுக்கிவிட வலியுறுத்தி பிப். 2-ல் வடக்கு மற்றும் மத்திய கிரீஸ் பகுதிகளை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் வரிவிலக்கு உள்ளிட்ட சலுகைகளை வழங்க கிரீஸ் அரசு முன்வந்தது.

## தீர்வு என்ன?

பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு 21-ம் நூற்றாண்டில் தீவிரமாகியுள்ளது. இந்த மாற்றம் விவசாயிகளை பாதிக்காத அளவில் கொள்கைகளை உருவாக்க வேண்டியது ஆளும் அரசுகளின் தலையாய பொறுப்பாகும். விவசாய உள்கட்டமைப்புக்கான முதலீடு களை அதிகரிப்பது, வேளாண் பணிகளில் நவீன தொழில்நுட்பம், உபகரணங்களை அறிமுகப்படுத்துவது, தரமான இடுபொருட் கள், சமமான சந்தை வாய்ப்புகள், நிலை யான நீர்ப்பாசன வசதி கட்டமைப்பை உரு வாக்கல், போதிய அளவிலான வேளாண் வருமானத்தை உறுதிப் படுத்துதல் ஆகி யவை அத்தியாவசியமாகி உள்ளன.

உலக மக்கள் தொகையில் வேளாண் சமூகத்தினரின் பங்குதான் அதிகம். எனவே அவர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு இது போன்ற நிரந்தர தீர்வுகளை உருவாக்குவது அவசியம் மட்டுமல்ல, கடமையும் கூட. பெருகி வரும் மக்கள் தொகையின் உணவு தேவையை ஈடு செய்ய வேளாண் உற்பத்தி பெருக்கம் செய்யப்பட வேண்டியது அவசியம். உழவன் பின்னால்தான் உலகம் என்ற அடிப்படை தத்துவத்தை அனைவரும் உணர்ந்தறிய வேண்டிய தருணம் இது.

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
25.02.2024

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு.
**light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# சுற்றுலாவிகளைக் கவரும் வடக்கின் தீவுகள் - 02



நிஷாந்தி பிரபாகரன்

# வரலாற்றுப் பெறுமதி மிக்க வளங்களுடன் நெடுந்தீவு

நெடுந்தீவின் வளங்கள் வரலாற்றுப் பெறுமதி மிக்கவை. நெல் சிறுதானிய பயிர்களும் கோதுமை வயல்களுடன் சணல், பெருக்கு, பாலை, பனை, தென்னை, மூலிகைச் செடி கொடிகளுடன் கடலும் கடல் சார்ந்த இடமுமான இந்த நெய்தல் நிலத்தில் பாலும் மோரும் பாய்ந்தோடிய வரலாறுகள் பல. மருந்து மாமலை வனம் என இத்தீவினை போற்றி பெருமிதம் கொண்டார் மன்னன் செகராசசேகரன்

யாழ்ப்பாணத்திலிருந்து மற்றெல்லாத் தீவுகளிலும் கூடிய தொலைவில் அமைந்திருக்கும் தீவு இதுவே. யாழ்ப்பாணத்திலிருந்து இதன் தூரம் 45 கிலோமீட்டர் ஆகும். ஆனால் இந்தியாவின் இராமேஸ்வரக் கரையிலிருந்து இதன் தூரம் 38 கிலோமீட்டர் மட்டுமே. புங்குடுதீவில் இருந்து 10 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. நெடுந்தீவு வடக்குத் தெற்காக 6 கிலோமீட்டர் அகலத்தையும், கிழக்கு மேற்காக 8 கிலோமீட்டர் நீளத்தையும் கொண்ட ஒரு சரிந்த இணைகர வடிவில் 30 கிமீ சுற்றளவையும், 48 சதுர கிலோமீட்டர் பரப்பளவையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் போலவே 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டுள்ள இத்தீவு பசுத்தீவு, அபிஷேகத் தீவு, மருத்துவ மாவனம், புட்கரம், நெடுந்தீவு, டெல்வ்ற் எனப் பல பெயர்களால் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலம் வரை அழைக்கப்பட்டு வந்துள்ளமை அறியப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எல்லாத் தீவுகளுக்கும், தங்கள் நாட்டில் காணப்பட்ட இடங்களின் பெயர்களைச் சூட்டினார்கள். நெடுந்தீவிற்கும் தங்கள் நாட்டிலுள்ள ஒரு பாற்பண்ணை நகரின் பெயரான டெல்வ்ற் என்ற பெயரைச் சூட்டினார்கள். டெல்வ்ற் என்ற இப் பெயராலேயே இன்றும் இத்தீவு அழைக்கப்பட்டு வருகிறது.

இங்கிருந்து பால், தயிர், இளநீர் ஆகிய அபிஷேகத் திரவியங்கள் தென் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரர் ஆலயத்திற்கு லிங்கேஸ்வரப் பெருமானின் அபிஷேகத்திற்காகக் கொண்டு செல்லப்பட்டு வந்தமையால், அபிஷேகத்தீவு என அழைக்கப்பட்டு வந்தது. இங்கு அனேக நோய் தீர்க்கும் மூலிகைகள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இன்றும் இங்கு பொற்சீந்தில், சாறணை, மிசிட்டை, பிரண்டை, வீணாலை போன்ற பல மூலிகைகள் நிறைந்து காணப்படுகின்றன.

நெடுந்தீவு மந்தை வளர்ப்புக்கேற்ற இயற்கை வளம் கொண்டது. இங்கு சில மக்கள் பட்டி பட்டியாக ஆடு வளர்ப்பதை ஒரு பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆடுகள் வாங்குவதற்காக வியாபாரிகள், இங்கு காலத்திற்குக் காலம் வருவார்கள். நெடுந்தீவில் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வந்திருக்



கிறார்கள் என்பதும், மக்கள் வாழக்கூடிய வசதிகள் இங்கு இருந்தன என்பதும் அங்கு கண்டெடுக்கப்பட்ட 2000 ஆண்டு பழைய கறுப்பு சிவப்பு மட்பாண்ட பாத்திரங்கள், உரோமர் கால நாணயங்கள், கல்லாலான கருவிகள், இடிந்த பண்டைக்கால வீட்டுச் சுவர்கள் என்பவற்றாலும், இங்கு பண்டைக் காலம் முதலாக மக்கள் வாழ்ந்து வந்தமையை அறியக் கூடியதாகவுள்ளது.

## வெடியரசன் கோட்டை

2000 ஆண்டு பழமையான பெருங்கற் கால மையம் இதுவாகும் என்பதற்காக ஆதாரமாக அங்கு கண்டெடுக்கப்பட்ட கறுப்பு சிவப்பு மட்பாண்டம் சிறந்த எடுத்துக் காட்டாகும். நெடுந்தீவின் மேற்கே கோட்டைக்காடு என்னும் பகுதியில் இது அமைந்திருந்தது. இங்கிருந்தே வெடியரசன் என்னும் மன்னன் தனது ஆட்சியைச் செலுத்தினான். இக்கோட்டை சோழர் காலக் கட்டிட முறைப்படியே கட்டப்பட்டிருந்தது.

இதன் வடிவமைப்பு பல சித்திர வேலைப் பாடுகளைக் கொண்டிருந்திருக்கலாமென அதன் சிதைந்த பகுதிகளைக் கொண்டு புதை பொருள் ஆராட்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்று இக் கோட்டை அழிந்த நிலையிலுள்ளது. இக்கோட்டையை அண்மித்துள்ள பகுதிகளில் மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், வட்டமான நாணயங்கள், சதுரமான நாணயங்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## பெரியதுறை

பெரியதுறை நெடுந்தீவிலிருந்து மக்கள் பண்டைக் காலத்தில் வேறு இடங்களுக்குப் பிரயாணம் செய்துள்ளார்கள். தென் இந்தியாவிலுள்ள நாகபட்டினம், இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கு மக்கள் சென்று பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவது வழக்கமாய் இருந்திருக்கிறது.

இங்கிருந்து மக்கள் பாய் வள்ளங்களிலும், வத்தைகளிலும் யாழ்ப்பாணக் கிட்டங்கிக்கும், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய தீவுகளுக்கும் பிரயாணஞ் செய்தனர்.



வெளி நாடுகளிலிருந்து போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் பாய்க்கப்பல்கள் மூலம் பொருட்களை இத்துறை மூலமே இறக்கினர்.

இவற்றை விட வேறு கிழக்கே கிழக்குத்துறை, வடக்காக தாளைத்துறை, குடவிலித்துறை, தெற்காக குவிந்தாத்துறை, வெல்லைத்துறை இருந்திருக்கின்றன. எனினும் பெரிய துறை என்ற பெயரைக் கொண்ட இத்துறையே மன்னராட்சிக் காலங்களி லும் வழக்கிலிருந்திருக்கிறது. ஒல்லாந்தராட்சிக் காலத்தில் எவரும் இத்துறையிலிருந்து இந்தியாவிற்குச் செல்லாதபடி தடை விதிக்கப்பட்டிருந்ததாக அறியக் கிடக்கின்றது. இத் துறைமுகத்தையண்டியே வெடியரசனுக்கும் மீகாமனுக்கும் சண்டை நடந்ததாக வரலாறு கூறுகின்றது. இத்துறை நெடுந்தீவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.

## மாவிலித் துறைமுகம்

ஒல்லாந்தர் நெடுந்தீவை ஆட்சி செய்த காலத்தில் இத்துறைமுகம் மூலமாகவே குதிரைகளை இறக்கி ஏற்றினார்கள். இன்று நெடுந்தீவு மக்கள் ஏனைய தீவுகளுக்கும், யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கும் கடல்மூலம் பிரயாணஞ் செய்யப் பயன்படும் பிரதான துறைமுகமாகவும் விளங்குகின்றது. இது ஏறக்குறைய 300 அடி நீளமும் 75 அடி அகலமும் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. பிரயாணிகள் இறங்கவும், பொருட்களை இறக்கவும் கொங்கிறீற்றினால் துறை ஒன்று உள்ளது.

இது கடலினுள் 15 அடி நீளமும், 10 அடி அகலமுமாகக் கட்டப்பட்டுள்ளது..முற்காலத்தில் வத்தைகள் மூலமும், பாய் வள்ளங்கள் மூலமும் பிரயாணம் செய்த மக்கள் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத பிற்பகுதி தொடக்கம் இன்றுவரை இயந்திரப் படகுகள் மூலமும் இயந்திரமிணைக்கப்பட்ட வள்ளங்கள் மூலமும் இத்துறைமுகத்திலிருந்து பிரயாணஞ் செய்கின்றார்கள்.

## போர்த்துக்கீசர் கோட்டை

போர்த்துக்கீசரும் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து நெடுந்தீவின் மேற்கே பெரியதுறை என்னும் துறைமுகத்திற்கண்மையில் ஒரு கோட்டையைக்கட்டி அங்கிருந்து ஆட்சி செய்தனர். இக்கோட்டை இடிந்த நிலையில் மண்மேடாகக் காட்சியளிக்கிறது. இக்கோட்டை பற்றி பாசெற் என்னும் பாதிரியார், இது ஒரு இரண்டு மாடிக் கட்டிடமாகக் கட்டப்பட்டிருந்தது. இதன் சுவர்கள் மிகவும் அகலமாகவிருந்தன. இரண்டு அறைகளும், கீழே இரண்டு அறைகளுமிருந்தன. இவற்றுக்குக் கீழே ஒரு சுரங்க அறையிருந்தது. அதற்குக் கதவுகள் போடப்படவில்லை. அவ்வறையிலிருந்து மேலறைக்குச் செல்லக்கூடியதாக இரட்டைச் சுவர்ப்படி கட்டப்பட்டி ருந்தது. அதற்கு வெளிப்புறமாக நாலு நாலு அடி சதுர யன்னல் அமைக்கப்பட்டிருந்தது. இதன் கூரை தட்டையாகவிருந்தது எனவும் கூறியுள்ளார்.

## ஒல்லாந்தர் கோட்டை

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட இக்கோட்டை நெடுந்தீவின் மத்தியில் தற்போதைய வைத்தியசாலைக் கண்மையில் கடற்கரைப் பக்கமாகக் கட்டப்பட்டிருந்தது. இதனுள் சுரங்க அறை ஒன்றும் காணப்படுகிறது.இதுவும் இன்று அழிந்த நிலையிலேயே உள்ளது. இதன் சுவர்கள் மிக அகலமானவை. இதன் உள்ளும் புறமும் பல உடைந்த ஒல்லாந்தர் பாவித்த பொருட்களும், செப்பு நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. இதன் சுவர்கள் இன்றும் கம்பீரமாகக்காட்சியளிக்கின்றன.

## குதிரைகள்

இலங்கையின் இத்தீவில் மட்டுமே காணக்கூடிய காட்டு குதிரைகளையும் குதிரை வண்டிகளையும் காணலாம் இங்குள்ள குதிரைகளும் கோவேறு கழுதைகளும் 1660ம் ஆண்டு முதல் 1675ம் ஆண்டு வரை வடபகுதியின் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில், அவர்கள் தங்களின் தேவைகளுக்காகவும், வியாபாரத்திற்காகவும் பல நூற்றுக்கணக்கான குதிரைகளை அரேபியா, பேர்சியா, முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தார்கள்.

இவை யாவும் உயர்ந்த இனத்தைச் சேர்ந்த குதிரைகளாகும். இவற்றுக்காக ஒல்லாந்தர் பல கிணறுகளையும், கேணிகளையும் கட்டியிருந்தார்கள். அத்துடன் பல குதிரை கட்டும் லாயங்களையும் அமைத்திருந்தார்கள். இவையின்றும் சிதைந்த நிலையில் நெடுந்தீவின் மேற்கே காணப்படுகின்றன. இக்குதிரைகள், ஒல்லாந்தர் நாட்டை விட்டுப் போனதும், போதிய பராமரிப்பின்மையாலும், அவற்றைத் தேடுவாரின்மையாலும், அவை சுயேச்சையாகத் தீவின் தெற்கேயுள்ள புல்வெளிகளில் சுதந்திரமாகத் திரிவதைக் காணலாம். இத்தீவிலிருந்து இக்குதிரைகளை வெளியே கொண்டு செல்ல முடியாது என்ற ஒரு சட்டம் நெடுந்தீவில் வழக்கில் உள்ளது.

## குதிரைஇலாயங்கள்

குதிரை லாயங்கள் ஒல்லாந்தர்களால் குதிரைகள் கட்டுவதற்காகக் கட்டப்பட்ட பலதூண்கள் இன்றும் சாறாப்பிட்டிப் பகுதியில் காணப்படுகின்றன. இவை பலநூற்றாண்டுகளாகியும் முற்றாக அழிந்துவிடாமல் இன்றும் நிமிர்ந்த நிலையில காட்சியளிக்கின்றன. இவை குதிரை லாயங்கள் என அழைக்கப்படுகின்றன.



நெடுந்தீவின் வியப்பூட்டும் மேலும் பல சுவாரஸ்யமான தகவல்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்.






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# மூத்தவர்களுக்கான வரி நிதிச் செல்வ மேலாண்மை

இலங்கையானது பொருளாதார நிச்சய மற்ற காலகட்டத்திற்கு செல்லும்போது, முதியவர்கள் தங்கள் நிதி நலனைப் பாதுகாப்பதில் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். பணவீக்கம், ஏற்ற இறக்கமான நாணய மாற்று விகிதங்கள் மற்றும் அரசாங்க கொள்கைகளில் சாத்தியமான மாற்றங்கள் குழப்பத்தையும், கவலையையும் உருவாக்கலாம்.

இக் கட்டுரை வரிவிதிப்பு, நிதி மற்றும் செல்வ மேலாண்மை ஆகிய துறைகளில் உள்ள சிக்கல்களை வழிசெலுத்துவதற்கான அறிவு மற்றும் செயல்திறனுள்ள உதவிக்குறிப்புகளுடன் இலங்கையின் மூத்தவர்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட உத்திகளுக்குள் நுழைவதற்கு முன், இலங்கையின் தற்போதைய பொருளாதாரச் சூழலைப் பற்றிய விரிவான புரிதலைப் பெறுவோம். கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய காரணிகள் பின்வருமாறு:

• பணவீக்கம்: ஜனவரி 2024 நிலவரப்படி இலங்கை அதிக பணவீக்கத்தை அனுபவித்து வருகின்றது, 20% ஐ விட அதிகமாக உள்ளது. இது வாங்கும் சக்தியை பெரிதும் பாதிக்கின்றது, மற்றும் வரவு செலவுத் திட்டம், செலவு செய்யும் பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் சீராக்கம் செய்தல் தேவைப்படுகின்றது.

• நாணய ஏற்ற இறக்கங்கள்: அமெரிக்க டொலர் (USD) போன்ற முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாய் (LKR) கணிசமாகக் குறைந்துள்ளது. இது இறக்குமதி செலவுகள் மற்றும் முதலீட்டு வருமானத்தைப் பாதிக்கின்றது.

• அரசாங்கக் கொள்கைகள்: வரிக் கொள்கைகள், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பலன்களில் சாத்தியமான மாற்றங்கள் முதியவர்களின் நிதியை கணிசமாகப் பாதிக்கலாம். முன்மொழியப்பட்ட மாற்றங்களைப் பற்றி தொடர்ந்து தெரிந்துகொள்வது முக்கியமாகும்.

வரி

இலங்கை மூத்தவர்களுக்கான வரி குறிப்புகள்

• உங்கள் வரி விதிக்கக்கூடிய வருமானத்தைப் புரிந்து கொள்ளுங்கள்: ஓய்வூதியங்கள், வாடகை வருமானம், முதலீடுகள் மற்றும் கூடுதல் வருவாய்கள் உட்பட உங்கள் வரி விதிக்கக்கூடிய வருமான ஆதாரங்களைத் தெளிவாகக் கண்டறியவும்.

• குறிப்பாக நிச்சயமற்ற காலங்களில் வரிகளை வழிநடத்துவது மன அழுத்தத்தை ஏற்படுத்தும். இலங்கை முதியவர்களுக்கு, உங்கள் வரிக்கு உட்பட்ட வருமானத்தைப் புரிந்துகொள்வது துல்லியமாகத் தாக்கல் செய்வதற்கும் சாத்தியமான வரிச் சலுகைகளை அதிகப்படுத்துவதற்கும் முக்கியமானது. இந்த பிரிவு உங்கள் வருமான ஆதாரங்கள், விலக்குகள் மற்றும் விலக்குகளை அடையாளம் காண்பதில் ஆழமாக ஆராய்கின்றது, மேலும் நம்பிக்கையுடன் வரி முறையை வழிநடத்த உங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றது.

உங்கள் வருமான ஆதாரங்களைக் கண்டறிதல்:

• ஓய்வூதியங்கள்: அரசாங்க ஓய்வூதியங்கள் தவிர்ந்த தனியார் ஓய்வூதியங்கள் மற்றும் முதலாளியின் அனுசரணையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டங்கள் அனைத்தும் பொதுவாக இலங்கையில் வரிக்குட்பட்ட வருமானமாக அமைகின்றன.

• வாடகை வருமானம்: சொத்துக்களை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம், நீங்கள் அதை மீண்டும் சொத்தில் முதலீடு செய்தாலும், அது வரிக்கு உட்பட்ட வருமானமாகும்.

• முதலீடுகள்:

▪ வட்டி வருமானம்: வங்கிக் கணக்குகள், நிலையான வைப்புத்தொகைகள் மற்றும் அரசாங்கப் பத்திரங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் வட்டி வருமானம் வரிக்கு உட்பட்டது. இவை தற்போது 5% தடுத்து வைத்தல்வரிக்கு உட்பட்டதாகவும்(Withholding Tax - WHT) மற்றும் வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் கீழ் மேலும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

▪ பங்கிலாப வருமானம்: பட்டியலிடப்பட்ட நிறுவனப் பங்குகளின் பங்கிலாப வருமானம் தற்போது 15% தடுத்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாகவும் (Withholding Tax - WHT) மற்றும் இது இறுதியானதாக கருதப்பட்டு வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. எனவே மேலதிக வருமான வரிக்கு உட்பட்டது அல்ல.

▪ மூலதன ஆதாயங்கள்: மூலதன / நிலையான சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபம், பொதுவாக 10% மூல தன ஆதாய வரிக்கு உட்பட்டது.

▪ பிற/ஏனைய வருமானம்: பகுதி நேர வேலை வருமானம், ஆலோசனைக் கட்டணம் அல்லது பரிசு வெற்றிகள் போன்ற கூடுதல் வருமான ஆதாரங்கள், இயல்பு மற்றும் தொகையைப் பொறுத்து வரி விதிக்கப்படலாம்.

மூத்தவர்களுக்கான வரி விலக்குகளும் மற்றும் கழிவுகளும்:

• தொண்டு பங்களிப்புகள்: இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள் வரம்புக்குட்பட்ட தொகை வரம்புடன், வரி விலக்குகளுக்கு தகுதியுடையவை.

• செலவின நிவாரணம் - உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் 2ஆம் பந்தியின் (C) உப பந்தியின் கீழ் - "வசதியுள்ள ஆளொருவருக்கு ரூபா 1,200,000 வரைக்கும் ஏற்பட்ட பின்வரும் குறிப்பிட்ட செலவீனத்தின் மொத்த தொகைக்கு செலவின நிவாரணம் பெறலாம்.

• மருத்துவ காப்புறுதிக்கான பங்களிப்பு அடங்கலாக சுகாதாரத்துக்கான செலவினங்கள்.

• அத்தகைய நபர் ஒருவருக்கு அல்லது

அவரது பிள்ளைகளுக்கு உள்ளூரில் ஏற்பட்ட தொழில் சார் கல்விக்கான அல்லது ஏனைய கல்விக்கான செலவீனம்.

• வீட்டுக் கடன்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி.

• தொழில்வழங்குனரின் கீழ் அல்லது தொழில் வழங்குனர் சார்பான ஓய்வூதிய திட்டம் தவிர்ந்த அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கு ஊழியரினால் செய்யப்பட்ட பங்களிப்பு.

• இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமம் வழங்கப்பட்டதும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டதுமான பங்குகள் அல்லது ஏனைய நிதி சாதனங்கள் அல்லது பதவி செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் நியதிச் சட்டத்தின் கீழான திறைசேரி பிணையங்கள் அல்லது உள்ளூர் திறைசேரி முறிகள் நியதிச் சட்டத்தின் கீழான திறைசேரி முறிகள் என்பவற்றின் கொள்முதலில் ஏற்பட்ட செலவினம்.

இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) வரி செலுத்துவோருக்கு அவர்களின் வரிக்குட்பட்ட வருமானத்திலிருந்து கழிவாக மேற்கூறிய செலவின நிவாரணங்களை 31.12.2022 வரை வழங் கியது. இந்த நிவாரணத்தின் நோக்கம் வரி செலுத்துவோர் மீதான வரிச்சுமையைக் குறைப்பதன் மூலம் அவர்கள் வருமானத்தை ஈட்டும்போது அவர்கள் செய்த சில செலவுகளைக் கழிக்க அனுமதிப்பதாகும். செலவின நிவாரணப் பலன் (ERB) என்பது இலங்கையில் 1992 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வரி நிவாரணத் திட்டமாகும். இது தனிப்பட்ட வரிசெலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கின்றது.

கூடுதல் உதவிக்குறிப்புகள்:

• ஒழுங்கமைக்கப்பட்ட பதிவுகளைப் பராமரித்தல்: உங்கள் வருமான ஆதாரங்கள், செலவுகள் மற்றும் முதலீடுகள் பற்றிய தெளிவான பதிவுகளை வரி தாக்கல் செய்யும் போது எளிதாகக் குறிப்பிடவும்.

• மின்னணு (Electronic) முறையில் கோப்பு: உள்நாட்டு வருவாய்த் துறை மின்னணுத் தாக்கல் செய்வதை ஊக்குவிப்பதோடு, வசதி மற்றும் துல்லியத்தை வழங்குகின்றது.

• நிபுணத்துவ உதவியை நாடுங்கள்: தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் உகந்த தாக்கல் உத்திகளுக்கு மூத்த குடிமக்களின் வரி விஷயங்களில் நிபுணத்துவம் பெற்ற வரி ஆலோசகரைக் கலந்தாலோசிக்கவும்.

நினைவில் கொள்ளுங்கள்:

• வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் அடிக்கடி மாறலாம். உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் இணைய தளத்தைப் பார்ப்பதன் மூலமோ அல்லது வரி ஆலோசகரை அணுகுவதன் மூலமோ தான் புதுப்பித்த நிலையில் இருங்கள்.

• இந்தத் தகவல் பொது அறிவுக்கானது மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வரி ஆலோசனையாகக் கருதப்படக்கூடாது.

உங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு தகுதியான நிபுணரை அணுகவும்.

• நிபுணத்துவ ஆலோசனையை நாடுங்கள்: மூத்தவர்களின் குறிப்பிட்ட தேவைகளை நன்கு அறிந்த வரி ஆலோசகரிடம் ஆலோசனை பெறுவது, உங்கள் வரி தாக்கல் செய்வதை மேம்படுத்தவும், இணக்கத்தை உறுதிப்படுத்தவும் உதவும்.

• வரிச் சட்ட மாற்றங்கள் குறித்து புதுப்பித்த நிலையில் இருங்கள்: அபராதங்களைத் தவிர்க்கவும், "புதிய பலன்களைப் பயன்படுத்திக் கொள்கிறீர்கள்" என்பதை உறுதிப்படுத்தவும், வரிச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கான புதுப்பிப்புகளைத் தவறாமல் சரிபார்ப்பது அவசியம்.

நிதி

நிச்சயமற்ற நேரங்களுக்கான நிதி திட்டமிடல் உத்திகள்:

• உங்கள் முதலீட்டு போர்ட்/போலியோவைப் (Portfolio) பல்வகைப்படுத்துங்கள்: பங்குகள், பத்திரங்கள், ரியல் எஸ்டேட் (Real Estate) மற்றும் பொருட்கள் போன்ற பல்வேறு சொத்து வகைகளில் உங்கள் முதலீடுகளைப் பகிர்ந்து வைப்பதன் மூலம் ஆபத்தைக் குறைக்க கூடியதாக இருக்கும். உங்கள் இடர் சகிப்புத்தன்மை, முதலீட்டு இலக்குகள் மற்றும் தேர்வு செய்த முதலீட்டில்வைத்திருக்கக்கூடிய கால அளவு போன்ற காரணிகளைக் கவனிப்பது மிகவும் முக்கியமாகும்.

• வருமானம் ஈட்டும் சொத்துக்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்: உங்கள் ஓய்வூதியத்தை ஈடுசெய்யவும், உங்கள் வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிப்பதற்கும், பங்கு லாபம் செலுத்தும் பங்குகள், வாடகை சொத்துக்கள் அல்லது நிலையான வருமானக் கருவிகள் போன்ற வழக்கமான வருமான வழிகளை வழங்கும் சொத்துக்களில் முதலீடு செய்யுங்கள்.

• பணப்புழக்கத்தில் கவனம் செலுத்துங்கள்: எதிர்பாராத செலவுகள் அல்லது அவசர நிலைகளை ஈடுகட்ட, எளிதில் அணுகக் கூடிய பணத் தொகுப்பை பராமரிக்கவும். இந்த முறைமை மன அமைதி அளிப்பதுடன் சந்தை வீழ்ச்சியின் போது கட்டாய சொத்து விற்பனையைத் தவிர்க்கின்றது.

• உங்கள் பட்ஜெட்டை (Budget) மதிப்பாய்வு செய்து சரிசெய்யவும்: உங்கள் வருமானம் மற்றும் செலவுகளை தவறாமல் மதிப்பிடுங்கள், பணவீக்கம் மற்றும் மாறி வரும் தேவைகளுக்கு உங்கள் பட்ஜெட்டை (Budget) சரிசெய்தல் மிகவும் அவசியம். அத்தியாவசிய செலவுகளுக்கு முன்னுரிமை அளித்து, அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பர செலவினங்களைக் குறைப்பதற்கான வழிகளைத் தேடுங்கள்.

செல்வம்

மூத்தவர்களுக்கான செல்வ மேலாண்மைப் பரிசீலனைகள்:

• எஸ்டேட் திட்டமிடல்: நீங்கள் வாழும் காலத்திலேயே சொத்து விநியோகத்திற்கான உங்கள் விருப்பங்களை கோடிட்டுக் காட்டும் ஒரு விரிவான எஸ்டேட் திட்டத்தை உருவாக்கவும். உயிலை உருவாக்குதல், நிறைவேற்றுபவரை நியமித்தல் மற்றும் உங்களுடைய வாரிசுகள் மீதான வரிச் சுமையைக் குறைக்க அறக்கட்டளைகளைக் கருத்தில் கொள்வது ஆகியவை இதில் அடங்கும்.

• நீண்ட கால பராமரிப்பு திட்டமிடல்: நீண்ட கால பராமரிப்பு காப்பீடு, அடமானங்கள் அல்லது உங்கள் எஸ்டேட் திட்டத்தில் பராமரிப்பு ஆதரவை இணைத்தல் போன்ற விருப்பங்களை ஆராய்வதன் மூலம் சாத்தியமான எதிர்கால நீண்ட கால பராமரிப்பு தேவைகளை நிவர்த்தி செய்யவும்.

• வாரிசுகளின் பதிவு மற்றும் பதவிகளை மதிப்பாய்வு செய்யவும்: உங்கள் ஓய்வூதியக் கணக்குகள், ஆயுள் காப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் பிற சொத்துக்கள் உங்கள் எஸ்டேட் திட்டத்துடன் இணைக்கப்பட்ட வாரிசுககளை நியமித்துள்ளன என்பதை உறுதிப்படுத்தவும்.

• வழிகாட்டுதலைத் தேடுங்கள்: மூத்தவர்களுக்கான செல்வ நிர்வாகத்தில் நிபுணத்துவம் பெற்ற நிதி ஆலோசகரை அணுகுவது உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் உத்திகளை நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பொருளாதார நிச்சயமற்ற தன்மையை நகர்த்துவதற்கு முன்கூட்டிய திட்டமிடல் மற்றும் தகவலறிந்த முடிவெடுத்தல் தேவை. தற்போதைய பொருளாதார சிக்கலான தன்மையினை புரிந்துகொள்வதன் மூலம், கிடைக்கக்கூடிய வரிச் சலுகைகளைப் பயன்படுத்துவதன் மூலம், உங்கள் முதலீடுகளை பன்முகப்படுத்துவதன் மூலம் மற்றும் எதிர்காலத்திற்கான திட்டமிடல் மூலம், உங்கள் நிதிப் பாதுகாப்பை பலப்படுத்தலாம் மற்றும் இந்த சவாலான காலங்களை அதிக நம்பிக்கையுடன் கடந்து செல்லலாம்.

இந்தக் கட்டுரை பொதுவான தகவலை வழங்குகின்றது மற்றும் தனிப்பட்ட நிதி ஆலோசனையாகக் கருதப்படக்கூடாது. சிறந்த வரி ஆலோசகர்கள், நிதித் திட்டமிடுபவர்கள் மற்றும் செல்வ மேலாளர்கள் போன்ற தகுதி வாய்ந்த நிபுணர்களுடன் உங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகள் மற்றும் இடர் சகிப்புத்தன்மைக்கு ஏற்றவாறு உத்திகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த நுணுக்கங்களை அறியப்பெற்று பல அனுகூலங்களை அடையக் கூடியதாக இருக்கும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுமே உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்லும்




நேர்கண்டவர்
ஞா.கவினி

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளை பிரதேசத்தில், கடும் முயற்சியால் இன்று பலருக்கு முன்னுதாரணமாக திகழும் தொழில் முயற்சியாளர் சிவலோகநாதன் சயிலாவை "தமிழர் பொருண்மியம்" செவ்வி கண்டது.

இயலாமைகளும் இழப்புக்களும் பலருக்கு வாழ்க்கையை அதல பாதாளத்தில் தள்ளி விடுகிறது, ஆனால் சிலருக்கோ, தோல்விகளும் இழப்புகளும் தான் வாழ்க்கைக்கான தூண்டுகோலாக மாறுகின்றன. அப்படித்தான் லக்கி மல்டி ப்ரொடெக்ட் என்ற தொழில் கூடத்தை சிறப்புற நிர்வகித்து வரும் நிறுவுனரின் வாழ்க்கையில், அவருடைய குடும்பத்தில் அவருக்கு நேர்ந்த இழப்பும் அந்த இழப்பின் பின்பு வாழ்க்கையை நகர்த்துவதற்கு ஏற்பட்ட இடர்களும் வாழ்க்கை பாதையையே மாற்றி விட்டிருக்கிறது,

வாழ்க்கை ஆரம்பித்த சில வருடங்களிலேயே ஏற்பட்ட அசம்பாவிதங்களால் நான்கு பெண் குழந்தைகள் உடனான ஒரு குடும்பத்தை தலைமை தாங்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பை இருபத்தி மூன்று வயதுகளிலேயே தன்னுடைய தோள்களில் சுமக்க ஆரம்பிக்கிறார் சயிலா.

பல கனவுகளோடும் கற்பனைகளோடும் ஆரம்பித்த வாழ்க்கை இடையில் பெரும் சூறாவளியாய் மாறிப்போனபோது, சைலஜாவுக்கு ஆறுதலோடு சேர்த்து துணிவையும் அளித்தது அவளது மகளின்



சிவலோகநாதன் சயிலா

தலைமை ஆசிரியர் பதவி என்கிறார்.

அந்த இக்கட்டான தருணங்களில் தன்னுடைய குழந்தைகளை வளர்க்க வேண்டும், அவர்களை இந்த உலகத்தின் சிறந்த மனிதர்களாக உருவாக்க வேண்டும் என்கின்ற மனத்திடம் இன்று அவரை ஒரு தேர்ந்த தையற்கலை நிபுணராகவும், தொழில் அதிபராகவும் மாற்றி இருக்கிறது.

தனது 23 வது வயதில் கணவனை இழந்து நான்கு பெண் பிள்ளைகளையும், விடா முயற்சியையும் மூலதனமாகக் கொண்டு இந்த தொழிலை ஆரம்பித்தேன் என்று தனது வலிகளை மறைத்துக் கொண்டு புன்னகைக்கிறார் சயிலா.

நான் இந்த தொழிலை ஆரம்பிக்கும் போது தையல் குறித்து எந்தவிதமான பயிற்சிகளையும் பெற்றிருக்கவில்லை, பழைய ஆடைகளை கவனமாக பிரித்து அவற்றை மறுபடியும் தைத்து, மறுபடியும் பிரித்து மறுபடியும் தைத்து என்று ஒரு ஆக பழைய தையல் இயந்திரத்தோடு தான் இந்த தொழிலை ஆரம்பித்தேன்.

அந்த காலங்களில் என்னை நம்பி என்னுடைய வாடிக்கையாளர்களாக மாறிய பலரை நான் இப்போதும் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.

முதன்முதலாக ஓர் ஆடை விற்பனை நிலையத்துக்கு எனது பொருட்களை எடுத்துச் சென்ற போது அந்த கடையின் உரிமையாளர் மிகுந்த சிரத்தையோடும் எனது உற்பத்தி பொருட்களை கவனித்து அவற்றை தொடர்ந்து நான் உற்பத்தி செய்வதற்கு உதவினார்.

உண்மையில் அந்த நேரத்தில் அவ்வாறான உதவிகள் என்பது கடவுள் நேரில் வந்து செய்தது போல தான் நான் உணர்ந்து

கொண்டேன் .

என்று உணர்ச்சி பூர்வமாக பேசும் இவரிடம் உங்களது தொழிலின் ஆரம்ப கட்ட பிரச்சினைகளையும் தற்போதைய வளர்ச்சியையும் பற்றி கூறுங்கள் என்று கேட்டபோது, புன்னகை மாறாமலேயே தனது தொழிலில் ஆரம்பத்தில் தனக்கு ஏற்பட்ட இடர்களையும் அவர் எதிர்கொண்ட சவால்களையும் விவரிக்கத் தொடங்குகிறார்.

இந்த தொழிலை நான் எனது குழந்தைகளின் நலன் கருதியும் என்னுடைய வாழ்வாதாரத்திற்காகவும் கையில் எடுத்தபோது, சலித்துக் கொண்டவர்கள் அதிகம். ஆனால் நான் வாழ்வாதாரத்தோடு சேர்த்து என்னுடைய குழந்தைகளை நேரடி கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும் என்று விரும்பினேன்.

ஆரம்பத்திலேயே எனக்கு சம்பாதிப்பதை விட எனது குழந்தைகளை பராமரிப்பதிலும் அவர்களை சிறந்தவர்களாக உருவாக்குவதிலும் முனைப்பு இருந்தது அந்த முனைப்பு தான் வீட்டில் இருந்தே தொழில் செய்யும் சிந்தனையை எனக்கு உருவாக்கி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

தற்போதும் கூட என்னுடைய தொழில் ஓரளவிற்கு வளர்ந்த நிலையிலும் வீட்டுக்கு அருகாமையிலே என்னுடைய தொழில் கூடத்தையும் அமைத்திருக்கிறேன். அன்று தொட்டு இன்று வரைக்கும் நான் கூறுவது இதுதான்...

நாங்கள் எவ்வளவு தூரம் உழைப்பதற்காக ஓடிக்கொண்டிருக்கிறோமோ அதைவிட பெறுமதியான நேரத்தை எங்கள் குழந்தைகளுக்காக செலவழிப்பதில் முனைப்பு காட்ட வேண்டும். உண்மையில் நாங்கள் சேர்த்து வைக்கும் பணத்தை விட அவர்களுக்காக நாங்கள் செலவழிக்கும் நேரம் தான் மிகச்சிறந்த சொத்தாக இருக்கும் என்று நம்புகிறேன் என்று கூறிக்கொண்டிருந்த சயிலா எங்களோடு பேசிக்கொண்டிருந்த நேரம் எல்லாம் தனது தொழிலையும் வாடிக்கையாளர்களையும் கவனிப்பதற்கு நிகராக தனது பிள்ளைகளிலும் அக்கறை கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

உண்மையில் ஒரு பெண் தனித்து தன்னுடைய குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய நிலைக்கு ஆளானால், அவள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் ஒவ்வொன்றும் தன்மேலும் தனது பிள்ளைகள் மேலும் அளவு கடந்த அக்கறையை செலுத்த வைக்கிறது என்கிற சயிலா, அனுபவம் தானே சிறந்த ஆசான் என்று சிரித்துக் கொள்கிறார்.

தற்போது சகல விதமான ஆடைகள் மற்றும் துவிச் சக்கர வண்டிக்கான சில உபகரணங்களையும் மாத்திரமன்றி சூழலுக்கு ஏற்ற வகையில் துணி பைகளையும் உருவாக்கி வருகிறார். துணிகளால்




என்ன விதமான அழகுப் பொருட்களையும், பாவனை பொருட்களையும் உருவாக்க முடியுமோ அவற்றையெல்லாம் உருவாக்கி தனது தொழில் கூடத்தை திறமையாக நிர்வகித்து வரும் இவரிடம் உங்களுடைய அடுத்த கட்ட நகர்வுகளைப் பற்றி கூறுங்கள் என்று கேட்டபோது,

பல பிரச்சனைகளுக்கு பிறகு இன்று எனது தொழில் கூடத்துக்காக ஒரு நிலத்தினை கொள்வனவு செய்திருக்கிறேன். அந்த இடத்தில் ஒரு தொழில் கூடத்தினை அமைத்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதுதான் எனது கனவு என்று விளிவிரியச் சொல்கிறார் இதுவரை முறையாக தையல் கலையை பயில தனக்கு கிடைக்கவில்லை என்று ஆதங்கப்படும் இவர், தற்போது தனது தகைமைகளை நிரூபிப்பதற்கு ஏற்ற சான்றிதழ்களையும் வாய்ப்புகளையும் தேடிக் கொண்டிருப்பதாகவும், அதனை கொண்டு மேலே தனது தொழிலை நகர்த்திச் செல்வதற்கான பல வழிகளை வைத்திருப்பதாகவும் கூறும் இவரது தொழில் கூடத்தை இன்னும் விரிவாக்குவதற்கு பல திட்டங்களை விளக்குகிறார்.

சரி, உங்களைப் போன்ற பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று வினவியபோது,

“எந்த நிலையில் இருந்தாலும் பெண்கள் ஒவ்வொருவரும் தமக்கு தமக்கென்று ஒரு சுய தொழிலை கொண்டிருப்பது மிகவும் அவசியம் ஆகும். அப்போதுதான் பெண்கள் தன்னம்பிக்கையோடும் சுய கௌரவத்தோடும் வாழ முடியும், நாங்கள் மாத்திரம் அல்ல உங்களை சுற்றி இருக்கும் ஒவ்வொரு பெண்ணையும் தொழில் முனைவோர்களாகவும், தன்னம்பிக்கை மிகுந்தவர்களாகவும் உருவாக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய கடப்பாடும் ஆகும்.

உண்மையில் தற்போது இந்த விடயத்தில் எனக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது, எமது பிரதேசத்தின் சிறு தொழில் முயற்சி பிரிவினர் தான். சந்தை வாய்ப்புகள் உட்பட நமக்கு தேவையான பயிற்சிகளையும் தேடி தேடி வழங்குவதிலும் நம்மை உற்சாகப்படுத்துவதிலும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினர் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

நீங்கள் ஒரு தொழிலை ஆரம்பிக்க விரும்புகின்ற நபராக இருந்தால் உங்களுடைய பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகத்தின் சிறு தொழில் அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களோடு தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்.

எனினும் உங்களுடைய விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் உங்களை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்று நம்பிக்கையோடு சிரிக்கும் சயிலாவிடமிருந்து நாங்களும் நம்பிக்கையோடு விடை பெற்றோம்.



# நான் எனது பணம்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“பணம் ஓர் ரசவாதியைப் போன்றது. அதைக்கொண்டு நிலத்தை விசுவாசமாகவும், நியாயத்தை ஆரோக்கியமாகவும், வன்முறையை அறிவாகவும் உங்களால் மாற்ற முடியும். அது உலகளாவிய நம்பிக்கை. பணம் என்னும் இடைத் தரகரைக் கொண்டு இரண்டு நபர்களை எந்த ஒரு பணித்திட்டத்திலும் ஒத்துழைக்கச் செய்ய முடியும்.”(நோவா ஹராரி)

பணத்திற்கான வேட்டையே இன்றைய உலகை ஆட்டிப்படைக்கிறது. இதற்காகவே போர்கள் ஆக்கிரமிப்புகள், என அனைத்தும் நடக்கின்றன. மனிதகுலத்தின் பேராசையின் விளைவே இன்றைய காலநிலை மாற்றமும் கலப்படமான உணவுகளும் கலாச்சார மாற்றங்களும்.

கலாச்சார மாற்றம் என்பது மோசமான ஒட்டுண்ணி போன்றது. அது முதலில் ஒருவர் இருவரைப்பிடித்துக் கொள்ளும். விரைவாக அடுத்த அடுத்த நபர்களைப் பிடித்து தொங்கிக் கொண்டு வேகமாக ஊரெங்கும் பரவிவிடும். தான் பிறந்த இடத்திலிருந்து உலகெங்கும் பரந்து செல்லும். இயற்கையில் இது மாற்றமடையும் போதும், இதே வழியை பின்பற்றி உலகை ஆட்டி வைக்கும். அது ஆடையாக இருந்தாலும் ஆபரணமாக இருந்தாலும், உணவுப் பழக்கமாக இருந்தாலும், நியதி ஒன்று தான். ஒட்டுண்ணிகளாகி வேகமாக பரவி விடும். சந்தர்ப்பத்தில் இது ஆளையும் கொல்லக்கூடும்.

மூன்று வேளையும் நெல்லரிச் சோறு உண்டவர்கள் தமிழர். காலை உணவுக்காக முதல்நாளே அரிசியை மாவாக்கி அதை வறுத்து உலர வைத்து தயார் நிலையில் வைத்திருப்பர்கள் பெண்கள். இதற்கெனவே உரல், உலக்கை, திரிகைக் கல், ஆட்டுக்கல், சுளகு தட்டம் என பல்வகை உபகரணங்களும் வீடுகளில் இருக்கும்.



கோதுமை எமது மண்ணை ஆக்கிரமித்தது ஒரு விபத்தல்ல. மேற்குறித்த ஆக்கிரமிப்புகளில் வந்ததே. நாடுகாண் பயணங்களும் நாடுகளை கைப்பற்றும் முயற்சிகளும் பெரும் பேரரசுகளின் மூலம் நடைபெறவும் இல்லை அவை முதலில் தனவந்தர்களின் முதலீட்டில் அறிஞர்களையும் தொழிலதிபர் களையும் அனுப்பி வைத்தே நாடுகளை கண்டறிந்தன. அவர்களின் முயற்சி அங்குள்ள வளங்களையும் செல்வங்களையும் கண்டறிவதுதான். கண்டவற்றை முதலில் அந்த தனவந்தர்களே அனுபவித்தனர். பின்னாளில் அரசாங்கங்கள் தலையிட்டு வரிகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து அவற்றை பொது உடைமையாக்கின.

கோதுமை தொழிலாளர்களில் பசிக்கு உணவாக வந்தது. கோதுமையை விளைவிக்க முடியாத மண்ணிலும் அது பிரதான உணவாக மாறியது. எங்கோ தொலைவில் கோதுமையை பயிரிடும் விவசாயி தனது சந்தையை எமது மண்ணில் வளர்த்துள்ளான். சும்மாவல்ல மாவில்லாது போனால் அரசாங்கமே கவிழ்ந்து விடும் அளவுக்கு அவனது சந்தை வலுவாக உள்ளது.

அதிகாலையில் ராகம் பாடித் துயிலெழுப்பும், குயில் குஞ்சுகளும் காகங்களும் பல விதமான பறவைகளையும் நாம் மறந்து போகிறோம். அந்த இடத்தை கோதுமை பர்கர், உற்பத்தியான பாண் வாகனங்கள் பிடித்துள்ளன. இன்னும் எமது உணவுக் கலாச்சாரத்தில் பீட்சா, பர்கர், குளிர்களி. எனவும் பானங்களிலும் புதுவகைப் பானங்களாகவும் மாறிவந்துள்ளது. இந்த காலாச்சார மாற்றமானது எமது திருமண வைபவங்கள் மரண வீருந்துகள் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் என அனைத்திலும் புகுந்து விளையாடிக்கொண்டிருக்கிறது.

கலாச்சார நிகழ்ச்சிகளை வடிவமைக்க முதலாளிகள் தயாராக உள்ளார்கள். பணம் பணமே அனைத்தையும் திர்மானிக்கிறது. எந்த வைபவங்களிலும் ஒரே வகையான உணவுகள் சிறு சிறு மாற்றங்களுடன் அரங்கேறுவதும் வியப்புத்தான். ஒடியல் பிட்டு. குரக்கன்பிட்டு தினையரிசிச் சோறு, உழுத்தம்மாபிட்டு, உழுந்துக்களி, எண்ணெய்ப்பிட்டு, பால் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், ஆப்பம், தோசை, பயறுத்துவையல், பொரிவிளாங்காய், என அனைத்தையும் தாமாகவே கரைய விட்டுவிட்டோம்.

இந்த உணவுக் கலாச்சார மாற்றம் எமது கவுரவத்தையும் நிலைநாட்டுவதாக அவரவர் நினைத்துக் கொள்கிறோம். அந்த அருமையான உணவுகளை தமது இளமையில் உண்டு கழித்தவர்கள் இன்னும் நம் மண்ணில் இருக்கிறார்கள்.. இந்த உணவுக்கலாச்சார மாற்றம் எமது ஆரோக்கியத்தை கெடுத்து வருவதும் தெரிகிறது. ஆனாலும் என்ன இவையெல்லாம் கடந்த கால வரலாறுகளாக இப்போது சித்தரிக்கப்படுகிறது.

வருடாவருடம் எள் விதைத்து அது பழையதாக வந்தபின் வெய்யிலில் பொட்டுப் போட்டு காயவிட்டு வீட்டிலேயே இடித்து எண்ணெய் எடுப்பார்கள். எள்நெய் எடுக்கும் போது நாங்கள் விளையாடப்போகாமல் திண்ணையிலேயே இருப்போம் எண்ணெய் தளதளக்க பிந்த பிண்ணாக்கில் சர்க்கரை சேர்த்து கைழைத்து தன்கையால் பிடித்து திரட்டி தலுவாள் அம்மா என்ன சுவை என்னசுவை. அது உடம்புக்கு பெலன் என்பாள் பூட்டி. இதெல்லாம் வரலாறாக எம்மிடம் இருக்கின்றன. ஆனால் வரலாறுகள் திரும்புவதுண்டா?

ஒருபோதும் வரலாறு திரும்புவது இல்லை மேலும் வரலாறு என்பது அதிகாரம் படைத்தவர்களால் படைக்கப்பட்டதேயாகும் அதில் உண்மை என்று எதுவும் இல்லை. கலாச்சாரம் என்கிற நீரோடையில் வரலாறு என்பது நிலைத்து நிற்பதல்ல. கலாச்சாரம் என்பது கோடானு கோடிக்கணக்கான மக்களை விலங்குகளை பருப்பொருட்களை ஒன்றிணைத்து காலத்திற்கேற்ப விதிமுறைகளையும் ஒழுங்குகளையும் கொண்டதாகவே உருவாகிறது.

ஆனால் அது மாற்றமடையும். அதே போல வரலாறுகளை மனிதர்கள் திரும்பப் போய் பார்க்கலாம். ஆனால் அதை திருப்பி கொண்டுவர முடியாது. அதிகாரம் அல்லது பணம் அதை அனுமதிக்காது. பெரும்பாலும் முதலாளிகளின் பணமே அனைத்தையும் தீர்மானிக்கிறது. காலாச்சார ரீதியாக கலை பண்பாடு என்பதாக எமது வாழ்க்கையை எலக்ரோனிக் சாதனங்களின் உணவுபொருட்களின் விலைவாசி பற்றி கூச்சல் போடும் யாரும் கைபேசிக் கட்டணங்களின் அதிகரிப்பைப்பற்றி மூச்சு விடுவதில்லை. அந்த செலவை குறைப்பதுமில்லை. கோடிக்கணக்கான பணம் எமது தொலைபேசிகளினூடாக எமது மண்ணிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக இன்று சந்தையில் காணும் அதியுயர் கைபேசிகள் இன்னும் சில நாட்களில் செயல் குறைந்தவையாக மாறிவிடும். அதே கம்பனி மீள்வலுவுடன் புதியதொன்றை சந்தைக்கு அனுப்பிவிடும். இப்போது பல ஆயிரம் ரூபா கொடுத்து நீங்கள் வாங்கிய கைபேசி குப்பைக்கூடைக்குள் போய்விடும். அதற்கு ஆற்றல் உள்ள போதே அதன் சமூக செயற்பாடுகளை ரத்துச் செய்துவிடும். புதியவகை கைபேசி விற்பனையாக அதுவே வழி.

புரிகிறதா? இல்லை எனில் கொஞ்சம் பின்னே வாருங்கள் எம்மிடமிருந்த ஸ்கைப் தொலைநகல், பக்ஸ், வைபர் என இவற்றின் கதையை தேடிப்பாருங்கள் இன்றைய உலகில் பணமே எல்லாவற்றுக்கும் மூலமாகவும் அதை பெறுவதே அனைவரின் நோக்கமாகவும் உள்ளது மட்டுமல்ல நமக்குத் தெரியாமலே நாம் கொள்ளையடிக்கப்படுகிறோம் என்பதும் புரியும்.

போதைக்கு அகப்பட்டவர்கள் நாம் எப்போது மீளுவது. வீட்டிலும், சொந்த வாழ்விலும் நிம்மதியிழந்து யந்திரங்களைப் போல உழைக்கிறோம். இந்த பணத்தை கையகப்படுத்த முடிகிறதா என்றால் கிடையாது. நாம் அதைவிட மோசமாக எமது பழக்க வழக்கங்களை சமூகத்தின் பார்வைக்காக மாற்றுவதாக நினைத்து இன்னும் மோசமாக பாதிக்கப்படுகிறோம். உழைக்கும் பணத்தை திட்டமிட்டு செலவழித்து வாழ்ந்த எமது மூதாதையர்களைப் போல நாம் வாழவில்லை. எமக்கு தேவையான பணத்தை தருவதற்கு கடன்வழங்குநர்கள் வரிசையில் நிற்கிறார்கள் நாம் வருமானத்திற்கு ஏற்ப கடன் வாங்குவதில்லை. எமது வாழ்வை நிம்மதியை தொலைக்கவே கடன் வாங்குகிறோம்.

# வீட்டுத் தோட்டங்களில் மஞ்சள் பயிர்ச் செய்கை





யேமிகா
பொன்னுத்துரை
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

மஞ்சள் உணவிற்கு நிறம் மற்றும் சுவையூட்டுவதற்குப் பாலிக்கப்படும் அதே வேளை கூடியளவு மருத்துவத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மஞ்சளில் காணப்படும் "குர்குமின்" என்கிற வேதிப்பொருள், புற்றுநோய், அல்சர், நீரிழிவு நோய், மூட்டு வீக்கம்… போன்ற நாள்பட்ட நோய்களுக்கான மருந்துத் தயாரிப்புகளில் பிரதான பங்கு வகிக்கிறது.

புரதம், கார்போ-ஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்-சி, மெக்னீசியம், இரும்புச்சத்து, கால்சியம், பொட்டாசியம், நார்ச்சத்து உள்ளிட்டவையும் நிறைந்திருக்கின்றன. மனித உடலுக்கு நன்மை செய்யக்கூடிய மிகமுக்கிய வேதிப்பொருட்களும் மஞ்சளில் உள்ளன.

மேலும் இது ஒரு சிறந்த தொற்று நீக்கியாகும். இப்பயிர் கடல் மட்டத்திலிருந்து 700மீற்றர் உயரம் வரை சிறப்பாக வளர்கின்றது. இலங்கையின் ஈரவலயத்திலும் இப்பயிர் மழையை நம்பிச் சாகுபடி செய்யப்படுகின்றது. வறண்ட வலயத்தில் நீர்ப்பாசனத்தின் கீழ் வீட்டுத்தோட்டங்களில் சிறப்பாகப் பயிரிட முடியும்.

**தாவர இயல்பு**

குடும்பம் – Zingiberaceae இஞ்சிக் குடும்பம்.

தாவரவியல் பெயர் - Curcuma Longa.

இஞ்சியைப் போன்றே மஞ்சளும் ஒரு நிலக்கீழ்த் தண்டுப்பயிராகும். நிலத்தின் கீழ் உண்டாகும் பிரதான நிலக்கீழ்த் தண்டிலிருந்து விரற் கிழங்குகள் உண்டாகின்றன. இந்த விரல்களையே நடுகைக்கு பயன்படுத்துகிறார்கள். இதன் இலைகள் இஞ்சியைப் போன்று ஒடுக்கமாக இராது. அகன்று பரந்ததாக இருக்கும். முட்டா மஞ்சள்- இது சற்று உருண்டையாக இருக்கும். இதை அரைத்தோ, கல்லில் உரைத்தோ முகத்திற்குப் பூசுவார்கள். கஸ்தூரி மஞ்சள் - இது வில்லை வில்லையாக, தட்டையாக இருக்கும். வாசனை நிறைந்தது. விரலி மஞ்சள் - இது நீள வடிவில் இருக்கும். இதுதான் கறி மஞ்சள்.

இஞ்சிப் பயிருக்கு தேவையான கால நிலையும் மண் தேவையும் மஞ்சளுக்கு உகந்தது. இப்பயிரின் வளர்ச்சிக்கு 22$^{o}$C – 25$^{o}$C வெப்பம் சிறப்பானதாக அமையும். இப்பயிர் மணல், களி, இருவாட்டி போன்ற பல்வேறு வகையான மண்ணிலும் சாகுபடி செய்ய முடியும். ஆயினும் மண் நன்கு நீர் வழிந்தோடக்கூடியதாக இருத்தல் வேண்டும். இது நிழலைத் தாங்கி வளரும் பயிராகும்.

இலங்கையில் கூடுதலாக கொச்சின் வர்க்க மஞ்சளே பயிரிடப்படுகின்றது. மஞ்சற் பயிர் பங்குனி, சித்திரை மாதத்தில் நாட்டப்படுகின்றது. பின்பு 10-11 மாதம் கழித்து அறுவடை செய்யப்படுகின்றது.

மண்ணை நன்கு தூர்வையாக்கிய பின் மட்டுப்படுத்தி மட்டமான நிலத்திலேயோ அல்லது உயர்பாத்திகள் அமைத்தோ மஞ்சளை நாட்டலாம். மஞ்சற் துண்டங்களை 30×25 cm இடைவெளியில் நாட்ட வேண்டும். ஒரு ஏக்கர் நடுகைக்கு 500 -600kg மஞ்சள் தேவை.

**உரப்பசளைப் பிரயோகம்.**

ஏக்கருக்கு 8-10தொன் சேதனப்பசளை இடும்போது சிறப்பான விளைச்சலைப் பெற முடியும். மஞ்சளை அடிக்கட்டாக ஏக்கருக்கு

யூரியா- 30 kg

செறிந்த சுப்பர் பொஸ்பேற்- 40 kg

மியூரியேற்றுப் பொஸ்பேற்-50 kg

இம்மூன்று உரப்பசளையையும் மண்ணுக்குள் கலந்து நடுகையை மேற்கொள்ளும் போது சிறப்பான விளைச்சலைப் பெற முடியும்.

சிறப்பான விளைச்சலைப் பெறுவதற்கு பயிர் முளைத்த பின் 3-4 மாத இடைவெளியில் குறைந்தது 3 தடவைகளாவது களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். பயிர் முளைத்து 4-5 மாதங்களின் பின்பு பயிர் நன்கு வளர்ந்து நிலத்தை மூடுவதனால் களைகளின் தாக்கம் குறைவாக இருக்கும்.

**அறுவடை**

சுமார் 10-11 மாதங்களின் பின்பு இலைகள் மஞ்சள் நிறமாகும்போது அறுவடையை மேற்கொள்ளலாம். ஏக்கருக்கு 8-10 தொன் விளைச்சல் கிடைக்கும்.

**மஞ்சள் பதப்படுத்துதல்**

அறுவடை செய்த மஞ்சளை நன்கு துப்புரவு செய்து தாய்க்கிழங்கிலிருந்து விரல்களை பிரித்தெடுக்கவும் பெரிய துண்டுகளை வெட்டி இரு துண்டுகளாக்கிய பின் இயற்கை மண் பானையில் இட்டு கிழங்கை மூடி நீர் விட்டு அதன் மேல் காய்ந்த மஞ்சள் இலைகளை இட்டு பானையின் வாயை மூடிக்கட்டி களிமண்ணினால் பூசி அடைக்கவும் பானையை மெல்லிய நெருப்பில் சுமார் 3 மணி நேரம் எரிக்கும் போது உள்ளிருக்கும் மஞ்சள் அவிந்து விடுகின்றது.

பின்பு அடுப்பிலிருந்து இறக்கி குளிர வைத்து அவித்த மஞ்சளை தொடர்ச்சியாக 5-7 நாட்கள் சூரிய ஒளியில் காயவிட வேண்டும். நன்கு காய்ந்த மஞ்சளை சுழல் கருவியில் இட்டு நன்கு மினுக்குவதன் மூலம் விற்பனைக்குதயார் செய்யலாம். மஞ்சள் பதப்படுத்தும் தொழில்நுட்பம். 1% அளவுக்கு எலுமிச்சை கலந்த உப்பு சேர்க்க வேண்டும்.



46 நிமிடங்கள் முதல் 60 நிமிடங் களுக்கு வேக வைத்தால், இறுதி நிலையில் மிருதுத் தன்மையுடன் நல்ல மணம் மற்றும் நிறம் அதிகரித்து காணப்படும். வேக வைக்கும் நேரம் அதிகரித்தால், மஞ்சளின் நிறம் குறைந்துவிடும். 5 கிலோ பச்சை மஞ்சளிலிருந்து ஒரு கிலோ உலர்த்திய மஞ்சளைப் பெறலாம்.

# காசும் எரிவாயுவும் (Gas)

- வேதநாயகம் தபேந்திரன் -



தாயகத்திற்கு நெதர்லாந்து (ஹொலாண்ட்) நாட்டிலிருந்து ஒரு நண்பர் வந்தார். ஒரு மாதம் வரையில் நின்றார்.

சனி, ஞாயிறு ஓய்வு தினங்களில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நண்பரின் சமையல் கைவண்ணம் தெரிந்து அழைப்பைத் தவற விட மாட்டேன்.

மச்ச உணவுகளை வகை வகையாகத் தயாரிப்பதில் அவர் ஒரு மேதை.

விறகு அடுப்பை மூட்டி மண்சட்டி பானையில் சமைத்து வாழையிலையில் சுற்றி வைத்து விட்டுத் தருவார். ஆற்புதமான ஒரு சுவை.

விறகுடனும் நெருப்புடனும் போராடுகின்றீர்களே? ஏன் எரிவாயு (காஸ்-Gas) மூலமாகச் சமைத்துச் சாப்பிட்டால் என்னவெனக் கேட்டேன்.

இயற்கையின் உன்னதத்தை நான் எனது நாட்டில் தான் அனுபவிக்கலாம். ஹோலாண்டில் வீட்டில் நெருப்பு வைத்துச் சமைத்தால் அலாரம் அடித்து தீயணைப்புப் படை வந்து விடும். அங்கு நெருப்புச் சமையல் தடை செய்யப்பட்ட ஒன்று.

விறகு அடுப்பில் மண்சட்டி பானையில் சமைத்து விட்டு சாப்பிடுங்கள். அதன் மிகுதிச் சாப்பாட்டை மூன்று அல்லது நான்கு மணி நேரம் கழித்துச் சாப்பிட்டுப் பாருங்கள்.

தனித்துவமான சுவை தெரியும்.

அதே வேளையில் புயள- காஸ் அடுப்பில் அலுமினியப் பாத்திரத்தில் சமைத்து விட்டு இதே போலச் சாப்பிட்டுப் பாருங்கள்.

சுவையில் ஒரு வித்தியாசம் தெரியும். மூன்று அல்லது நான்கு மணி நேரம் கழித்துச் சாப்பிடும் போது மச்சென்று ஒரு மணம் தெரியும்.

அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கும் உணவால் உடலில் புற்றுநோய்க்குரிய வாய்ப்புகள் உண்டாவதாக மருத்துவமும் கூறுகின்றது.

Gas- காஸ் இறக்குமதிக்குப் பெருந் தொகைப் பணம் செலவாகிறது. ஆனால் உள்நாட்டில் விறகுச் சமையல் செய்யக் கூடிய பல இடங்களில் விறகு உக்குகின்றது.

அவசர வாழ்க்கை வாழும் காலம் இது. எல்லோருமே விறகில் சமைக்க முடியாது. பெரு நகரங்களில் தொடர்மாடிக் குடியிருப்புகளில் இதற்குச் சாத்தியமே இல்லை.



ஆனால் நாட்டின் முக்கால்வாசிச் சனத் தொகை புறநகரங்களிலும் கிராமங்களிலும் தான் இன்னமும் வாழ்கின்றனர்.

திங்கள் முதல் வெள்ளி, சனி வரையிலான நாள்கள் வேகமாக ஓடுகின்றனர்.

அந்த நாள்களில் குறைந்தது இரவுச் சமையலையாவது விறகு அடுப்பு மண்சட்டிச் சமையலாகச் செய்து கொள்ளலாம்.

ஓய்வு நாள்களில் மூன்று வேளைச் சமையலையும் இதே போலச் செய்து கொள்ளலாம்.

தமது சொந்தக் காணி விறகுகளைப் பயன்படுத்திச் சமையலைச் செய்யும் போது சுவையும் ஆரோக்கியமும் கிடைக்கும்.

அதே வேளையில் புயள- எரிவாயு வாங்குவதற்கான பணம் மீதப்படுத்தப்படும்.

இதன் மூலம் இறக்குமதிக்கான அந்நிய செலாவணியும் சேமிக்கப்படும்.

சென்ற 2019 நவெம்பரில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டபாய ராஜபக்ச உள்நாட்டு தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்கும் திட்டத்தைக் கொண்டிருந்தார்.

அவர் அதனை நடைமுறைப்படுத்திய விதம் தவறாக அமைந்து அவரது பதவிக்கே உலை வைத்தது.

ஆனால் கடந்த 2021,2022 ஆம் ஆண்டுகளில் Gas-எரிவாயுத் தட்டுப்பாடு மிகப் பாரதூரமாக ஏற்பட்ட போது விறகுச் சமையலை நோக்கிக் கட்டாயமாகத் தள்ளப்பட்டனர்.


அப்படிச் சென்றவர்களில் சிறுதொகையினர் விறகுச் சமையலில் மட்டும் ஈடுபடுகின்றனர்.

கணிசமானவர்கள் Gas- காஸ் அடுப்புச் சமையலுடன் விறகுச் சமையலையும் இணைந்த வாழ்க்கை முறையை உருவாக்கி உள்ளனர்.

தீமையிலும் நன்மை உண்டு என்பது போல இது நடந்து முடிந்து விட்டது.

இயற்கையுடன் இணைந்து வாழல், நோயற்ற சமூகம், பணச் சேமிப்பு உள்ள வாழ்க்கை முறையைப் பேண விறகு அடுப்பு, மண் சட்டி பானைச் சமையலை இயன்ற வரைப் பேணுவோம். ஊக்குவிப்போம்.

**இயற்கையுடன் இணைந்து வாழல், நோயற்ற சமூகம், பணச் சேமிப்பு உள்ள வாழ்க்கை முறையைப் பேண விறகு அடுப்பு, மண் சட்டி பானைச் சமையலை இயன்ற வரைப் பேணுவோம். ஊக்குவிப்போம்.**



# இலாபம் தரும் திராட்சை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



அதிகமான மக்களால் விரும்பி உண்ணக்கூடிய பழங்களில் ஒன்று திராட்சை.

மேலத்தேய நாடுகளில் மாத்திரம் அல்லாமல் தற்பொழுது பல நாடுகளில் பரவலாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற பழங்களில் ஒன்று திராட்சை ஆகும்.

திராட்சை செய்கைக்கு நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண் அல்லது செம் மண் இருத்தல் வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு சில விவசாயிகள் மாத்திரமே திராட்சை பயிர் செய்கையினைச மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றார்கள்.

நட்டம் ஏற்பட்டு விடுமோ என்ற ஐயப் பாடு தான் இதற்கு காரணமாக அமைகின்றது.

முயற்சி செய்யாமல் எதையும் சாதிக்க இயலாது என்பதையும் நாங்கள் நினைவில் வைக்க வேண்டும். பன்னீர் திராட்சை ரகங்களை நடும் பொழுது கட்டாயம் 1 1/2 அடி நீள, அகல, ஆழத்தில், 10 அடி இடை வெளியில் குழிதோண்ட வேண்டும்.

மற்ற ரகங்களாக இருந்தால் 1×1×1 அடி என்ற அளவுகளில் குழிகள் எடுக்க வேண்டும். நன்கு மக்கிய தொழுவுரம், அல்லது பசுந்தழை உரம் அல்லது குப்பை களைக் கொண்டு நடுகைக்கு 15 நாட்களுக்கு முன்பு குழிகளை நிரப்ப வேண்டும்.

பின்பு ஜுன், ஜுலை மாதத்தில் வேர் வந்த முற்றிய குச்சிகளை நடவு செய்ய வேண்டும். பன்னீர் திராட்சையாக இருந்தால் 10 × 12 இடைவெளி விட்டு நடுவது சிறந்ததாக இருக்கும். செடிகள் நட்ட உடனே நீர் பாய்ச்ச வேண்டும்.

அடுத்த மூன்றாவது நாள் மீண்டும் தண்ணீர் இட வேண்டும். அதைத் தொடர்ந்து வாரத்திற்கு இருமுறை அல்லது மூன்று முறை நிலத்தின் ஈர பதத்தினை அறிந்து கட்டாயம் நீர் பாய்ச்ச வேண்டும்.

திராட்சையை பொறுத்தவரை மற்ற பழ மரங்கள் போன்று இல்லை. மாறாக திராட்சை செடியினை கவ்வாத்து செய்ய வேண்டும் என்றாலும், அறுவடை செய்ய வேண்டும் என்றாலும். இச்செடிக்கு 15 நாட்களுக்கு முன் நீர் பாய்ச்சுவதை நிறுத்தி விட வேண்டும்.

கொடி வளர்ப்பும். கவாத்துமுறையும் நடவு செய்த செடி வளர வளர அதை ஒரே தண்டாக பந்தல் உயரத்திற்கு கொண்டு வரவேண்டும்.





பின்னர் பக்கவாட்டில் இரண்டு அல்லது மூன்று அடி வளர்ந்த பின்பு நுனியைக் கிள்ளி விடவேண்டும். கில்லிய பகுதியிலிருந்து புதிதாக ஓரிரு பக்கக்க கிளைகள் வளர ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில். பக்கக் கிளைகளை எதிரெதிர் திசைகளில் பரவ விடவேண்டும்.

இக்கிளைகளை மேலும் மேலும் இரண அடி பக்கவாட்டில் வளர்ந்த பின்பு நுனிகளை கிள்ளிவிட்டு, திராட்சைக் கொடி பந்தல் முழுவதும் படரச் செய்ய வேண்டும். பொதுவாக நான்கு மொட்டு என்ற நிலையில் கவாத்து செய்வார்கள்.

அது எந்த ரக திராட்சை என்பதைப் பொறுத்து இரண்டு மொட்டு நிலையிலும் கவாத்து செய்வது உண்டு. அதேபோல், கோடைக்காலப் பயிராக இருந்தால் டிசம்பர் அல்லது ஜனவரியிலும், மழைக்காலப் பயிராக இருந்தால் மே அல்லது ஜூனில் கவாத்து செய்ய வேண்டும். செடியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இயற்கை உரங்களை சரியான முறையில் சரியான நேரத்தில் இடவேண்டும்.

இதற்கு மக்கிய உரம், மண்புழு உரம், தொழுஉரம், போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்த முடியும். அதோடு இயற்கை பயிர் வளர்ப்பு ஊக்கிகளான மீன் அமிலம், ஜீவாமிர்தம், பஞ்சகாவ்யா போன்றவற்றை பயன்படுத்தி வந்தால் இலை புழுக்கள் இல்லாமல் அதிக பச்சையம் உள்ள ஆரோக்கியமான செடிகளை உருவாக்க முடியும். முக்கியமாக கவனிக்க வேண்டியது, பந்தல் முழுவதும் கொடிகள் நன்கு படர்ந்து வளர வகைசெய்ய வேண்டும்.

அதற்க்கு நுனியை அவ்வபோது வெட்டி விடுவது அவசியம். இதனையே நாங்கள் மேலே கவ்வாத்து செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளோம். தாய்க் கொடியையும் பக்கவாட்டில் வளரும் கொடிகளின் நுனியையும் 12 முதல் 15 மொட்டுகள் விட்டே வெட்ட வேண்டும். அதிகமாக திராட்சைக் குலைகள் உள்ள கொடியாக இருந்தால், அதனை பந்தல் உடன் சேர்த்து கட்ட வேண்டும்.



**பழங்கள் சீராகப் பழுப்பதற்கும், பழங்கள் மெழுகு போன்று அழகாக இருப்பதற்கும். திராட்சை கரைசலை. காய் விட்ட 20ஆவது நாளிலும் 40 ஆவது நாளிலும் தெளிக்க வேண்டும். திராட்சை கரைசல் உற்பத்தி செய்யும் முறையினை இணையதளம் ஊடாக சென்று பார்த்துக் கொள்ளலாம். பன்னீர் திராட்சையாக இருந்தால் ஒரு வருடத்திற்க்கு ஏக்கருக்கு 30 டன் கிடைக்கும்.**

வண்டுகள், இலைப் பேன்கள், மாவு பூச்சுகள் தண்டு துளைப்பான்கள் போன்ற பூச்சுகளை கட்டுப்படுத்த இயற்க்கை முறை பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம். பூச்சிகளின் தாக்குதல் அதிகம் இருந்தால் இயற்கை முறையிலான பூச்சிக்கொல்லிகளில் வீரியத்திணை கூட்டி பயன்படுத்துங்கள். ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதாக இருந்தால் விவசாய ஆய்வாளர்கள் ஆலோசனைப் படி செய்வது நல்லது.

பழங்கள் சீராகப் பழுப்பதற்கும், பழங்கள் மெழுகு போன்று அழகாக இருப்பதற்கும். திராட்சை கரைசலை. காய் விட்ட 20 ஆவது நாளிலும் 40ஆவது நாளிலும் தெளிக்க வேண்டும். திராட்சை கரைசல் உற்பத்தி செய்யும் முறையினை இணைய தளம் ஊடாக சென்று பார்த்துக் கொள்ளலாம். பன்னீர் திராட்சையாக இருந்தால் ஒரு வருடத்திற்க்கு ஏக்கருக்கு 30 டன் கிடைக்கும்.

அதுவே பச்சை திராட்சையாக இருந்தால் 40 டன் வரை கிடைக்கும். மற்றபடி விதையில்லாத ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள் என்றால் முறையே 15, 20 டன் பழங்கள் வரை கிடைக்கும். எந்த ரகம் என்றாலும், பருவத்துக்கேற்ப பயிர் செய்து, அழுகல் நோயிலிருந்து காத்து, அறுவடை செய்தால், திராட்சையில் கிடைக்கும் லாபம் அதிகம்தான். ஒரு ஏக்கரில் 120 நாளில் இலங்கை ரூபாய் 100 லட்சத்துக்கும் அதிகமாக லாபம் சம்பாதிக்கலாம்.

# வியாபாரத்தில் வெற்றிபெற அவசியமான பேச்சுக்கலை

- ஜான் லௌரி -



வெற்றிக்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் பிரதானமாக இருப்பது பேச்சுக் கலை. பேச்சு வார்த்தையை சிறப்பாக நடத்தி, அதில் வெற்றி காண்பது எப்படி..? 'நெகோஷியேஷன் மேட் சிம்பிள்' (Negotiation Made Simple) என்ற புத்தகம் இது பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்கிறது. அமெரிக்காவில் வாழும் ஜான் லௌரி (John Lowry) எழுதிய புத்தகம் இது. ஜான் லௌரி, வழக்கறிஞர் மற்றும் தொழில் ஆலோசகர் ஆவார். முக்கியமாக, இருதரப்புக்கு இடையே ஏற்படும் சர்ச்சைகளுக்கான தீர்வைச் சொல்லும் ஆலோசகர்.

"பேச்சுக்கலையில் இரண்டு விஷயங்கள் முக்கியமானது. ஒன்று, எல்லா பிரச்சினைகளையும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். இரண்டு, பேச்சு வார்த்தையை நன்கு திட்டமிட்டுச் செய்தால், அதிக பலன்கள் நிச்சயம் கிடைக்கும். பேச்சுவார்த்தைக் கலையில் வெற்றி என்பது இதில் இரண்டாவது ரகத்தை சார்ந்த தாகும்.

பேச்சுவார்த்தை என்றவுடனேயே நமக்கு என்ன தோன்றுகிறது? கோட்டும் சூட்டும் ரையும் கட்டிக்கொண்டு ஏசி அறையில் உட்கார்ந்து பேசுவது என்றுதானே! அதுதான் இல்லை. நாம் அனுதினமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்று தெரியாமலேயே அதைச் செய்துகொண்டு இருக்கிறோம்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல் என்றால் என்ன என்கிற கேள்விக்கான பதில், ஒரு நல்ல முடிவை எட்டும் பொருட்டு அல்லது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு அதில் ஈடுபடும் அனைவரும் தந்திரமாகப் பேசுவதுதான்.

இந்தப் பேச்சுவார்த்தைக் கலையில் நாம் கைதேர்ந்தவராக வேண்டும் எனில், நமக்கு முதலில் தேவையான முக்கியமான தகுதி நமக்குப் பிடிக்காத கடினமான விஷயங்களைச் செய்யும் ஊக்கமும் மனதும் நமக்கு வேண்டும். ஏனெனில், நாம் நினைப்பது நடக்கலாம், நடக்காமலும் போகலாம் என்கிற நிச்சயமற்ற சூழலில், நாமே முடிவெடுத்து செயல்பட வேண்டும். இதற்கு, நமக்குப் பிடிக்காத விஷயங்களையும் செய்யும் தைரியம் வேண்டும்.

பேச்சுவார்த்தை நடத்தும்போது எல்லா விஷயங்களிலும் வெற்றி பெறுவது சாத்தியம் இல்லை. சிலவற்றில் நாம் தோல்வி அடையலாம். சில பின்னடைவுகள், ஆச்சர்யங்கள், ஏமாற்றங்கள் போன்றவை நமக்குக் கிடைக்கலாம். ஆனாலும், இவற்றில் இருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக் கொண்டு இன்னும் மேம்பட்ட முறையில் பேச்சுவார்த்தை செய்பவராக முயல வேண்டுமே தவிர, இந்த வேலையே நமக்கு ஆகாது என ஒதுங்கக்கூடாது" என்று சொல்லும் ஆசிரியர், பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்யும் ஒருவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்என்பதற்கு ஒரு கதையையும் சொல்கிறார்.

"ஒரு கிராமத்தில் இரு விவசாயிகள் இருந் தார்கள். இருவருடைய தோட்டமும் அடுத்தடுத்து அமைந்திருந்தது. தோட்டத்திலேயே வீடு கட்டிக் குடியிருந்ததால், இருவர் குடும்பமும் மிகவும் நட்பாக இருந்தார்கள். ஒரு நாள் தோட்டத்தில் இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, கன்றுக்குட்டி ஒன்று தோட்டத்தினுள் வந்தது. இது யாருடையது என்கிற கேள்வி உருவானது. இருவரும், 'இது என்னுடையது' என்றார்கள். ஆரம்பித்தது பிரச்னை. பேச்சு, வாதமாகி சண்டையாகி இருவருக்கும் ஒரு மாதத்துக்கும் மேலாக பேச்சுவார்த்தை இல்லாமல் போய்விட்டது.

ஒரு நாள் தெருவில் சென்ற ஒரு தச்சு வேலைக்காரர், ஏதாவது வேலை இருக்கிறதா என்று ஒரு விவசாயியிடம் கேட்க, அவரை வீட்டுக்குள் அழைத்து பக்கத்து தோட்டக்காரரின் நட்பு, கன்றுக்குட்டி, ஒரு மாத கால பகை என எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினார்.

இந்த இரண்டு தோட்டத்துக்கும் நடுவே ஓர் அழகிய சிற்றோடை ஓடிக்கொண்டிருந்தது. 'நான் மரம் வாங்கித் தருகிறேன் அந்த ஓடையை ஒட்டி பக்கத்துத் தோட்டத்தைப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு தடுப்பு வேலி அமைத்துக் கொடு' எனத் தச்சுவேலை செய் பவரிடம் சொன்னார் அந்த விவசாயி.

உடனடியாக மரங்களை வாங்கித் தந்து மாலைக்குள் வேலையை முடிக்கச் சொல்லிவிட்டு, வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டார். மாலை தடுப்பு வேலி எப்படி இருக்கும்என்று காண ஆவலாக வீடு திரும்பினார். வேலி அமைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, தச்சுவேலை செய்பவர் சிற்றோடையின் மீது ஒரு பாலம் அமைத்திருந்தார்.

இவர் வீட்டுக்குள் நுழைந்தவுடனேயே பக்கத்துத் தோட்டத்து விவசாயி இவர் வீட்டுக்கு வந்து 'அண்ணே, எப்பேர்ப்பட்ட ஆள் நீங்க. சூப்பரான ஒரு பாலத்தை அமைத்து விட்டீர்கள். உங்கள் மனசு பெரிசு. நாம் இனி இணைபிரியா நண்பர்களாக இருப்போம்' என்று மனமுருகிப் பேச, இவரும்மனம்இளகி நட்பு பாராட்டினார்.

பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர் இந்தக் கதையில் வந்த தச்சுவேலைக் காரரைப் போன்றவராக இருக்க வேண்டும். அவர்கள் அசாத்திய துணிச்சல் கொண்டவர்களாக (வேலிக்குப் பதில் பாலம் போடும் அளவுக்கு) இருப்பார்கள். மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாத வாய்ப்பு அவர்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல, எவ்வளவு சிக்கல்கள் இருந் தாலுமே பிரச்சினையைப் பேசி முடித்துவிடலாம் என்கிற ரீதியிலான முரட்டுத்தனமான தைரியம் பேச்சுவார்த்தையை நன்கு நடத்துபவர்களிடம் இருக்கும்.

இவர்கள் எடுத்த காரியத்தை முடிப்பதில்

மிகவும் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கும் அதே சமயம், அவர்கள் அதிக பச்சாதாபம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். மேலே சொன்ன கதையில் வந்த தச்சு வேலை செய்பவரிடம் இந்தக் குணங்கள் இயல்பாக இருந்ததால்தான் அவரால் இரு விவசாயிகளிடையே இருந்த பகையை நீக்க முடிந்தது" என்று சொல்லும் ஆசிரியர், பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர்களுக்கான ஐந்து முக்கியமான குணாதிசயங்களை விளக்குகிறார்.

1. பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர்கள் தங்களை எப்படிக் கட்டுப்படுத்திக் கொள்வது என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள். எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் அடுத்தவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் அல்லது அடுத்தவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை நம்மால் கட்டுப்படுத்தவே முடியாது. முழுக்க முழுக்க நிச்சயமற்ற சூழலில் நாம் செயல்படுவோம்.

ஆனால், அவர்கள் ஆற்றும் வினைக்கு எப்படிப்பட்ட எதிர்வினையை நாம் ஆற்றுகிறோம் என்பதை நம்மால் முழுமையாகக் கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். இதற்கு தன்னை உணர்தல் என்கிற குணம் அவசியம் தேவை. இதனால்தான் பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர்கள் முழுமையாகத்தன்னை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை என்பது சுமுகமாக இருக்காது ரியாக்ஷன்கள் மாறலாம் நாம் அனுமானமாக ஒன்று நினைக்க, எதிராளி ஒன்று நினைக்கலாம் எனவே, சூழலுக்கேற்ப நம்முடைய ரியாக்ஷனை மாற்ற வேண்டியிருக் கலாம். இந்தச் சூழ்நிலைகளை வெற்றிகரமாகக் கையாள ஒருவர் தன்னை முழுமையாக உணர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம்.

2. பேச்சுவார்த்தையில் சிறப்பாக ஈடுபடும் ஒருவர் எதிராளியை எப்போது அனுசரித்துப் போக வேண்டும், எப்போது வெற்றி பெறுவதற்காக போட்டி போட வேண்டும் என்பது தெளிவாகத் தெரியும். எந்த ஒரு பிரச்னையையும் தீர்க்கும் நோக்கத்துடன் அணுகலாம். அல்லது சண்டை போடும் நோக்கத்துடன் அணுகலாம். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைக் குறிக் கோளாக வைத்தே மனிதர்கள் நடந்து கொள்கிறார்கள். எப்போது பிரச்னையைத் தீர்க்கும் நோக்கத்துடன் அன்பாக நடந்து கொள்ள வேண்டும், எப்போது நாம் விரும்பிய முடிவை அடைய சண்டை போடும் போக்கில் நடந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பவர்களே எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் அதிக ஆதாயத்தை அடைகின்றனர்.

3. எந்த ஒரு பேச்சு வார்த்தையிலும் முதன் முதலாக நாம் தரும் ஆஃபர் என்பது மிகவும் சிந்தித்து தருகிற ஒரு விஷயமாக இருக்க வேண்டும். இதைத் தேர்ந்தெடுக்கும்போது எந்த மாதிரியான பதற்றம் உங்களுக்கும் எதிராளிக்கும் இடையே உருவாகும் என்பதையும் நீங்கள் தீவிரமாக சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

இதில் இன்னும் ஒரு முக்கியமான விஷயம், எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் எவர் ஒருவர் முடிவைப் பற்றிப் பெரிய அளவில் கவலைப்படாதவராக இருக்கிறாரோ, அவருக்கே அதில் பெரிய வெற்றி கிடைக்க வாய்ப்புள்ளது. ஒரு பேச்சு வார்த்தையின்போது ஓர் அணுகுமுறையைக் கையில் எடுத்தால் அதை உடனடியாகச் செயல்படுத்திவிட வேண்டும் என்பது பேச்சு வார்த்தையை சிறப்பாகச் செய்பவர்கள், முழுமையாக உணர்ந்தவர்களாக இருப்பார்கள். அப்படி அந்த அணுகு முறையைக் கையில் எடுத்தபின் அதை ஒட்டிய எதிர் பார்ப்புகளை எவ்வாறு மேலாண்மை செய்வது என்பதையும் தெரிந்துவைத்துக் கொண்டிருப்பார்கள்.

4. பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர்களுக்கு எப்படி ஒத்துழைப்பு மற்றும் பச்சதாபத்துடன் செயல்பட்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தெளிவாகத் தெரியும். உருவாகிற சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் ஒத்துழைப்பு மற்றும் வெற்றிக்கான போட்டி என்கிற இரண்டுக்கும் இடையே இலகுவாகத் தங்களை மாற்றிக்கொள்ளும் கலையை முழுவதுமாகக் கற்றவர்களாக பேச்சுவார்த்தையை நன்கு செய்பவர்கள் இருப்பார்கள். ஒத்துழைப்பு என்கிற நடைமுறையில் மற்றவர்களுடைய எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு பச்சாதாபத்துடன் அதற்கேற்றத் தீர்வுகளை உருவாக்கவும் இவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள்.

பச்சாதாபம் என்பது பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுபவருக்கு வேண்டிய முக்கியமான ஒரு குணம் ஆகும். இதைச் சரிவர உபயோகித்தால் எதிராளியை நன்றாக இன்ஃப்ளுயன்ஸ் செய்ய முடியும். இது தவிர, எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் அதிக காரியங்கள் செய்வதற்கான அழுத்தங்கள் எதிராளியால் தரப்படலாம். இந்த அழுத்தத்துக்கு எதிர் அழுத்தம் தருவது எப்படி என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

5. பேச்சுவார்த்தையை சிறப்பாகச் செய்பவர்கள் அனைவரையும் எப்படித் திருப்திப்படுத்துவது என்பதைத் தெரிந்து வைத்திருப்பார்கள். என்னதான் வேற்றுமை இருந்தாலும் பேச்சு வார்த்தை முடிந்தபின் அனைவரும் திருப்தியுடன் இருக்க வேண்டும்என்பதுதான் அந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கமாக இருக்கும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடந்தால், அதில் உள்ள அனைவரும் ஓரளவு திருப்தி அடைந்த வுடனேயே தீர்வுகள் சுலபமாகக் கிடைத்துவிடும்.

உணர்வுகள், அகங்காரம் மற்றும் பயம் என்பது பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்படும் முடிவுகளை பெரிய அளவில் கட்டுப் படுத்துவதாக இருக்கும். இதனால் இது குறித்த பல விஷயங்களைச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவதில் பேச்சு வார்த்தை நடத்துபவர்கள் சிறப்பான திறமை கொண்டிருப்பார்கள்.

வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளை செய்ய சிந்தனை, ஒத்திகை, வாதங்களின் கோணங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய நிறைய முன்னேற்பாடுகளை நாம் செய்ய வேண்டியிருக்கும். எனவே, எந்த ஒரு பேச்சு வார்த்தைக்கும் செல்லும்முன் நன்கு திட்ட மிட்டு பல விஷயங்களை ஒருவர் செய்ய வேண்டியிருக்கும்" என்று சொல்லி முடிக்கிறார் ஆசிரியர்.

பேச்சுவார்த்தை என்னும் கலையைக் கற்க விரும்பும் அனைவரும் இந்தப் புத்தகத்தை படித்துப் பயன்பெறலாம்!

**வெற்றிகரமான பேச்சு வார்த்தைகளை செய்ய சிந்தனை, ஒத்திகை, வாதங்களின் கோணங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய நிறைய முன்னேற் பாடுகளை நாம் செய்ய வேண்டியி ருக்கும்.**

# சிறு வணிகங்களின் இணைய திறனை மேம்படுத்துவதற்கு கூகிளின் திட்டம்

**- எம்.நந்தினி -**

Google.org
Impact Challenge



## இலங்கை உட்பட 13 ஆசிய நாடுகளில் 3 இலட்சம் தொழில்முயற்சியாளர்கள் பயன்பெறுவார்கள்

கூகுளின் (Google) தொண்டு நிறுவனமான Google.org, 300,000 பின்தங்கிய குறு மற்றும் சிறு வணிகங்களினதும் சமூக நிறுவனங்களினதும் இணையத் திறன்களை மேம்படுத்துவதற்கு, இணைய சமாதான (CyberPeace) நிறுவனத்துடனும் உலகளாவிய சைபர் கூட்டணியுடனும் (Global Cyber Alliance) இணைந்து APAC சைபர்பாதுகாப்பு நிதியினை (APAC Cybersecurity Fund) நிறுவுவதற்கு, ஆசிய மன்றத்திற்கு (The Asia Foundation) 15 மில்லியன் டொலரை வழங்குகிறது.

இணையவெளி அபாயங்களிலிருந்து உள்ளூர் சமூகங்கள் மற்றும் மாணவர்களை பாதுகாக்குமுகமாக, மேம்படுத்தல் கருவிகள் வழங்கியும் உதவி மையங்களை (சைபர் clinic) நிறுவியும் ஆசிய மன்றமானது, இத்திட்டத்தினை செயல்படுத்தும் பிராந்திய பங்காளர்களான நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளது.

இந்த முயற்சியானது பங்களாதேஷ், ஹாங்காங், இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் உட்பட 13 நாடுகளில் நிறுவப்படவுள்ளது.

2023இல் அதிக எண்ணிக்கையிலான சைபர் தாக்குதல்களைப் பதிவுசெய்துள்ள ஆசியா மற்றும் பசிபிக்கை உள்ளடக்கிய பிராந்தியமானது, இணையவழிக் குற்றங்கள் பெருகும் மையமாக மாறியுள்ளது. இவ்வச்சுறுத்தல்கள் மற்றும் தாக்கங்கள் சிறு வணிகங்களுக்கு மிகவும் ஆபத்தானவை. இப்பிராந்தியத்திலுள்ள சிறு வணிகங்களுள், அறைவாசிக்கும் மேற்பட்டவைகள் கடந்த ஆண்டில் எதாவதொரு சைபர் தாக்குதலை அனுபவித்ததாக ஆராய்ச்சி காட்டுகிறது.

இவற்றுள் தீம்பொருள் (malware) தாக்குதல்களேபொதுவானதாக நடைபெறுகின்றன. இத்தகைய சம்பவங்கள் வணிக செயல்பாடுகளை அச்சுறுத்துவதுடன், வருமான இழப்பை ஏற்படுத்தி, வணிகத்தின் மதிப்பை இழிவுபடுத்துவதாகவும் அமைகின்றன. 70% க்கும் அதிகமான சிறு வணிக உரிமையாளர்கள் தீவிர இணையத் தாக்குதல்கள் தங்கள் வணிகத்தை நிறைவுக்குக் கொண்டுவரக்கூடும் என்ற அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இணைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் இச்சூழலில், தொழில்முனைவோரும் இணையப் பாவனையாளர்களும் ஏற்படக்கூடிய தாக்குதல்களைக் கண்டறிந்து, இணையவெளியில் தோன்றும் அச்சுறுத்தல்களிலிருந்து தங்களையும் தங்கள் வணிகத்தையும் பாதுகாக்கத் தேவையான திறன்களைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் சுற்றுச்சூழலை உருவாக்க முயலும், APAC சைபர்பாதுகாப்பு நிதியானது, ஆசிய மன்றத்தினூடாக, சிறு வணிகங்களினதும் பாதிபிற்காளாகும் ஏனைய குழுக்களினதும் டிஜிட்டல் பாதுகாப்பை வலுப்படுத்துமுகமாக, உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் மற்றும் வளங்களுடனும் அவற்றை இணைக்க எதிர்பார்த்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் உள்ளூர் பங்காளர்களின் ஆதரவுடன், இந்த முயற்சியானது, பங்களாதேஷ், ஹொங்கொங், இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில், சைபர் உதவி மையங்கள் (கிளினிக்குகள்) மற்றும் மேம்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

"ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக தம் வழியைக் கண்டறியும், அதிக பாதிப்பிற்கேதுவான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் இலாபநோக்கற்ற நிறுவனங்களுக்கும் தேவையான இணையத் திறன்களை வழங்கும் ஆசிய மன்றத்தை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

APAC Cybersecurity Fund ஆனது, உலகளாவிய பங்காளர்களின் உதவியுடன், உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கொண்டு, அடிமட்டத்தில் சைபர் விரிதிறனை வளர்ப்பதற்கு ஒரு கூட்டு அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. இந்த முயற்சி,

CyberPeace Institute

இலங்கையிலும் APAC பிராந்தியத்துக்குள்ளும் பாதுகாப்பான இணையவெளியை உருவாக்குவதில் ஏற்படுத்தும் முன்னேற்றங்களை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்” என மரிஜா ரலிக் தெரிவித்தார்.

2020 இன் தேசிய சைபர் பாதுகாப்பு சுட்டெண்ணில் இலங்கையானது, டிஜிட்டல் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பாதுகாப்பில் குறிப்பாக குறைந்த மதிப்பெண்களைப் பெற்று, 175 நாடுகளுள் 81 ஆவது இடத்தைப் பெற்றது. இத்தகைய சூழலில் இந்தத் திட்டமானது 10,000 தனிநபர்களை உள்ளடக்கிய 5,000 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (MSMEs) அடைய எதிர்பார்த்துள்ளது.


இலங்கைக்கான ஆசிய மன்றத்தின் நாட்டுப் பிரதிநிதி தினேஷா டி சில்வா, நிகழ்ச்சித் திட்டத்தின் அத்தியாவசியத் தன்மையைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

“இலங்கையில் அதிவிரைவாகப் பரந்து வரும் டிஜிட்டல் நிலப்பரப்பின் பின்னணியில், புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பங்களிக்கும் குறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முக்கிய பங்கை இனங்காண்பதுடன், அவை சைபர் அச்சுறுத்தல்களுக்கான பிரதான இலக்காகுவதையும் அங்கீகரிப்பது அவசியம்.

கணிசமான எண்ணிக்கையிலான MSMEகள், தீங்கிழைக்கும் சைபர் தாக்குதல்களுக்கு ஆளாவதைநாம் கண்ணோக்காதிருக்க முடியாததுடன், அவற்றின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டிய தேவையின் அவசரத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

விரிவான இணையப் பாதுகாப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வுடன் இந்த நிறுவனங்களை மேம்படுத்துவதென்பது ஒரு மூலோபாய தேவை மட்டுமல்ல, ஒரு முக்கியமான தேசிய முதலீடுமாகும்.”

இத்திட்டத்தின் உள்ளூர் செயற்பாட்டுப் பங்காளர்களில் ஒன்றான சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் சுதீர ஜயரத்னவும், MSMEகளின் அபிவிருத்தியிற்கு இத்திட்டம் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் குறித்து தனது எண்ணங்களைத் தெரிவித்தார்.



“சிறு தொழில்கள் மேம்பாட்டுப் பிரிவானது, நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வணிகங்களை மேம்படுத்தத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு சைபர் சுகாதாரம் மற்றும் சைபர் பாதுகாப்பு பற்றிய அறிவை வழங்கு வதன் அவசியத்தை அடையாளம் கண் டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் கூகுளின் ஆதரவுடன் ஆசிய மன்றத்துடன் இணைந்து பணியாற்ற கிடைத்திருக்குமிந்த வாய்ப்பு, எங்கள் இலக்கை அடைய எங்களை வலுப்படுத்தும்” ஆசிய மன்றத்தைப் பற்றி (asiafoundation.org): ஆசிய மன்றமானது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியம் முழுவதும் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத் துவதற்கும் பற்றுறுதிக் கொண்ட, இலாப நோக்கற்ற சர்வதேச அபிவிருத்தி ஸ்தாப னமாகும்.

70 ஆண்டுகால அனுபவமும் ஆழ்ந்த உள்ளூர் அறிவும் கொண்ட எங்கள் பணி, நல்லாட்சி, காலநிலை நடவடிக்கை, பால்நிலை சமத்துவம், கல்வி மற்றும் தலைமைத்துவம், உள்ளடக்கமுள்ள வளர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. சான் பிரான்சிஸ்கோவில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் வொஷிங்டன், DC இல் உள்ள அலுவலகத்தின் ஆதரவுடன், ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியம் முழுவதும் பரந்துள்ள எங்களது 17 நிரந்தர நாட்டு அலுவலகங்கள் மற்றும் திட்டங்கள் மூலம், நாம் 20க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றுகிறோம். எமது நிதியானது இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்தி முகவர்கள், மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனிநபர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பன்மைத்துவம் நிறைந்த மூலகங்களிடமிருந்து கிடைக்கப்பெறுகிறது.

Google.orgஐப் பற்றி (google.org) : கூகிளின் (Google) த இரண்டு நிறுவனமான Google.org மனிதக்குலத்தின் மிகப் பெரிய சவால்களில் சிலவற்றைத் தீர்க்க உதவும் வகையில், நிதி, தயாரிப்பு நன்கொடைகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் போன்ற Googleஇன் சிறந்த வளங்களை ஒன்றுசேர்த்து, பின்தங்கிய சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் விளைகிறது.

இந்நிறுவனம், அவர்கள் சேவைசெய்யும் சமூகங்களில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும், மற்றும் அளவிடக்கூடிய பணி புரியும், அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்கும் திறனைக் கொண்டதுமான இலாபநோக்கற்ற நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் போன்றவற்றுடன் ஒன்றிணைந்து பணிபுரிகிறது.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உ_ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**







முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு **கற்பகவனம்** செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2024இல் வெளியிடப்பெற்றது.